# தென்மொழி



## பழிபறித் துண்பார்...!

கையடி காட்டிக் கரவடி எண்ணிக்
கருத்தழியப்
பொய்நிழ லாட்டிப் புரையுரை கூறிப்
புழுவயிற்றுப்
பைநிறை வாகப் பழிப்பறித் துண்பார்
பகட்டிலெல்லாம்
மெய்நிறை காணர் உளநலம் முற்றும்
மிளிர்ந்தவரே!

---

தி. பி. ககூள, மடங்கல் (புரட்டாசி)

50 காசு





"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே !

சுவடி–4 | புரட்டாசி தி. பி. ககூகூஎ (1966 செப்டம்பர்) | ஓலை–8


# பார்ப்பனரின் எழுச்சி.

**பொ**துவாகப் பார்ப்பனர் என்று குறிக்கப் பெறும் 'பிராமணர்கள், நிலத்தேவர்கள் என்றே மறை(வேதங்)களிலும், நூன்முறை (சாத்திரங்)களிலும், பழநூல்(புராணங்)களிலும், பழங்கதை(இதிகாசங்)களிலும், அறிவு நூல்(ஆகமங்)களிலும், அறநூல்(மிருதி) களிலும், வேள்வி முறை(பிராமணங்)களிலும், மறையறிவு(உபநிடதங்)களிலும், சமயச்சடங்கு(ஆரண்யகங்)களிலும், மெய்ந்நூல் (தத்துவங்)களிலும், 'வினைநூல்(கரும காண்டங்)களிலும், வழிபாட்டு நூல்(பூஜா நியமங்)களிலும், ஓக(யோக)நூல்களிலும் மிக விரிவாகவும் விளக்கமாகவும் அடிப்படை உண்மைபோலும் கூறப்பட்டிருக்கின்றது. அவ்வடிப்படையிலேயே மக்களின் அமைப்புகளும் ஒருசார்புடையனவாகவே பகுக்கப் பெற்றுள்ளன.

இந்நூல்களில் கூறப்பெற்ற உண்மைகளின்படி தூய்மையே (சத்துவம்)நிரம்பியவர்கள் பிராமணர்கள் என்றும், ஆண்மை(ரஜஸ்)


பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:– தங்கப்பா.
உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

நிரம்பியவர்கள் 'க்ஷத்திரியர்கள்' என்றும், சோர்வு(தமஸ்)நிரம்பியவர்கள் 'வைசியர்கள்' என்றும் இம்மூன்று தன்மைகளில் எதுவுமே சரிவர அமையாதவர்கள் 'சூத்திரர்கள்' என்றும் கூறப்பெற்று வருகின்றன. இந்நால்வரும் உலகில் அறிவுபுரத்தல், புவிபுரத்தல், பொருள்செயல், தொண்டுசெயல் என்ற காரணங்களுக்காகவே 'பிரம்மா' என்னும் படைப்புக்கடவுளின் முகம், தோள், தொடை, பாதம் ஆகிய பகுதிகளினின்று தோன்றியவராகக் கூறப்பெற்றுள்ளனர். இந்நால்வகை மக்களுக்கும் கூறப்பெற்ற வாழ்முறைகளும், அறமுறைகளும், ஒழுக்க முறைகளும் மனு முதலிய ஆரிய நூல்களில் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன. அந்நூல் உட்பட எந்நூலையும், கலைகளையும், மறைகளையும் கற்று உணர்தற்கு உரியவர் பிராமணரே என்றும், பிறர் அவற்றைப் படிப்பதும், படிக்கக் கேட்பதும்கூட கூடாவென்றும் கண்டிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் படிப்பவனும், படித்து அவற்றின் ஒழுங்கு முறைகளில் ஒழுகுவோனுமாகிய பிராமணனுக்கே இவ்வுலகம் முழுவதையும் கட்டியாளும் தகுதியிருக்கின்றது என்றும் கூறப்பெற்றுள்ளது.

பத்தே ஆண்டு நிரம்பிய பிராமணனைத் தந்தையைப்போலும், நூறு ஆண்டு உடைய 'க்ஷத்திரியனை'ப் பிள்ளையைப்போலும் மதித்தல் வேண்டும் என்றும் மனுநூல் கூறுகின்றது. இன்னும் அரசன் பிராமணரைக் கேட்டு அவர் கருத்துப்படியே அரசு செலுத்த வேண்டும் என்றும், ஒவ்வொரு நாளும் பிராமணரைக் கூப்பிட்டு, அவர்களுக்கு உள்ள குறைகளைக் கேட்டு, அவற்றை நீக்குவது அரசன் அன்றாடக் கடமைகளில் ஒன்று என்றும், அரசன் நோயுற்றவிடத்துப் பிராமணனே அரசவையை நடத்தத் தக்கவன் என்றும், நான்காம் இனத்தவனாகிய 'சூத்திரனைக்' கொண்டு எந்த நாடு அரசாளப் பெறுகின்றதோ அந்நாடு சேற்றில் அகப்பட்ட மாட்டைப்போலத் துன்புற்று, வறுமைமிகும் என்றும், புதையல் பொருளைப் பிராமணன் தவிரப் பிறர் எடுத்தால் அப்பொருள் அரசனையே சாருமென்றும், பிராமணன் எடுத்தால் அஃது அவனுக்கே சொந்தமென்றும், மன்னனுக்குப் புதையல் கிடைத்தால் அதில் பாதியைப் பிராமணர்களுக்குத் தரவேண்டுமென்றும், குற்றம் செய்தவனை அவன் குலமறிந்தே தண்டிக்கவேண்டுமென்றும், பிராமணர் விருப்பத்திற்கு மாறாக எந்தத் தீர்ப்பையும் அரசன் சொல்லக்கூடாதென்றும், பிராமணனைக் காக்கும் பொருட்டு எவனும் எப்பொய்யைக் கூறினும் கரிசு(பாவமு)ம்

குற்றமும் ஆகாவென்றும், பிராமணன் பொய் கூறினுல் அவனை மன்னிக்க வேண்டுமென்றும், பிற மூவினத்தாரும் பொய் கூறினுல் அவர்களை நாடுகடத்த வேண்டும் என்றும், பிராமணன் தவிர்த்த பிறரைக் கைக்குக் கை, காலுக்குக் கால், கண்ணுக்குக் கண், நாக்குக்கு நா, செவிக்குச் செவி உடலுக்கு உடல் சிதைக்கவேண்டு மென்றும், பிராமணனைமட்டும் எந்த வகையான காயம் படாமலும் அவன் சொத்துகளுடன் ஊரைவிட்டுத் துரத்திவிடவேண்டுமென்றும், பிராமணர்களை இழிந்த பிறப்பினனுகிய நான்காம் இனத்தவன் திட்டினுல் அவன் நாக்கை அரசன் அறுத்தெறியவேண்டுமென்றும், பிராமணன் அமரத்தக்க உயர்ந்த இடத்தில் சமமாக அமர்ந்தால், சூத்திரனின் இருப்புறுப்பையே அறுத்தெறிந்து, ஊரைவிட்டே ஓட்ட வேண்டுமென்றும், பிராமணனை அவன் காறியுமிழ்ந்தால் உதடுகளை யும், அவன்மேல் சிறுநீர் படும்படி செய்தால் 'சூத்திரனின்' ஆண் குறியினையும் அறுத்தெறிய வேண்டுமென்றும், பிராமணனுடைய குடுமி, தாடி, மீசை இவற்றைத் தொட்டாலும் பிடித்து இழுத்தாலும் சூத்திரனுடைய கைகளையே துண்டிக்க வேண்டுமென்றும், பிராமண னுடைய பொருள்களைத் திருடியவன் தானே தன் தோளின்மேல் உலக்கை, கருங்காலித்தடி, அல்லது இருமுனையும் கூரான கத்தி இரும்புத்தடி இவற்றில் யாதேனுமொன்றைத் தூக்கிக்கொண்டு போய் முறையிடவேண்டுமென்றும், உடனே அரசன் அவனை உயிர்போகத் தண்டிக்க வேண்டியதென்றும், அதனுல் உயிர் போய்விடுமானுல் 'சூத்திரனின்' கரிசே(பாவமே)போய்விடுமென்றும், அவ்வாறு தண்டி யாமல் விட்டால் அரசனுக்கே அக் கரிசு போய்ச் சேருமென்றும், பிராமணனுடைய மாட்டினைத் திருடிக்கொண்டு போனவனின் முழங் காலை வெட்டியெறிய வேண்டுமென்றும், பிராமணன் வைத்து வளர்க் கும் செடியிலுள்ள பூவைத் திருடிக்கொண்டு போனுலும் அவனை 5 குன்றிமணியளவுள்ள பொன்னைத் தண்டமாகக் கட்டச்செய்ய வேண்டுமென்றும், பிறகுலத்துப் பெண்களைச் சேர்வதால் உலகில் எல்லாச் சாதிகளும் கலந்துவிடுமாகையால் உலகில் அறங்கள் குன்றி மழை பெய்யாமல் போகுமென்றும், ஆகவே ஒரு குலத்தில் உள்ள ஆடவர் பெண்டிர் பிற குலங்களிலுள்ள ஆடவர் பெண்டிர் களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் சூத்திரன் பணத்தை எக்காரணங் கொண்டும் தன் தேவைக்கு மிகுதி யாகச் சேர்க்கக்கூடாதென்றும், அவ்வாறு சேர்த்தால், தான் அடிமை யாக இருந்து உழைக்க வேண்டிய தலைவனுகிய பிராமணனையே

துன்புறுத்த நேரிடலாம் என்றும், பிராமணன் தலையிலுள்ள குடுமியை மொட்டையடிப்பதே அவனுக்கு உயிர்த் தண்டனையாகு மென்றும், ஆனால் பிறரை அவ்வாறு செய்ய நேருங்கால் உயிரை வாங்குவதே முறையாகு மென்றும், நாட்டிலுள்ள எல்லாக் கடின வேலைகளுக்கும் நான்காம் இனத்தாரான 'சூத்திரரை'யே அரசன் அமர்த்திக்கொள்ள வேண்டு மென்றும், அவ்வாறு அவர் எந்த வேலை செய்தாலும் அந்த வேலையினால் வரும் வருமானம் முழுவதும் அவருடைய தலைவர் களுக்கே சொந்தமாகுமென்றும், உழைப்பவர்களுக்குத் தம்தலைவர்கள் கொடுக்கின்ற உணவு, பொருள்களல்லால் பிறிதோர் உடைமை இல்லை யென்றும், பிராமணன் இந்த உழைப்பாளர்களிடமிருந்து எல்லா வகைப் பொருள்களையும் இலவசமாகவோ வலுக்கட்டாயமாகவோ பெற்றுக்கொள்ளலாம் என்றும், நான்காம் இனத்தவராகிய சூத்திரரை அரசன் தம்தம் தொழில்களையே தொடர்ந்து, விடாமல் செய்து வரும்படி கட்டாயப்படுத்தி வேலை வாங்கவேண்டுமென்றும், இல்லை யெனில் வேலையற்ற இவர்கள் உலகத்தையே அழித்து விடுவார்க ளென்றும், அரசன் பிராமணர்களைக் கொண்டே வரவு செலவு எழுதல், கருவூலப் பொருள்களை மேற்பார்வையிடுதல் முதலிய வேலைகளைச் செய்ய வேண்டு மென்றும், பிராமணனைப்போல் பூணூல், குறிகள் முதலியவற்றை அணிந்து கொள்ளும் நான்காம் இனத்தவரின் உறுப்புகளைக் குறைத்தல் அரசன் கடமையென்றும், அரசனின் கருவூலமே கொள்ளை போனாலும் பிராமணர்களுத் தீங்கு செய்யக் கூடாதென்றும், இவ்வுலகத்தில் தீ சுடுவதும், கடல் நீர் உவர்ப்பதும், நிலவு தேய்ந்து வளர்வதும், உலகங்கள் இயங்குவதும், மாந்தர்கள் படைக்கப் பெறுவதும், 'வேதங்'கள் ஓதப்பெறுவதும் பிராமணர் களாலேயே என்றும், எனவே அவர்களுக்குச் சினம் வரும்படி அரசன் நடந்து கொள்ளக்கூடாதென்றும், பிராமணன் உடலிலிருந்தே அர சன்(க்ஷத்திரியன்) உண்டாக்கப் பெற்றானகையால் பிராமணரை அரசர் கள் காக்கவேண்டியதே கடமையென்றும், இவ்விருவரே உலகிலுள்ள இன்பங்களையெல்லாம் நுகரத்தக்கவர் என்றும், மன்னன் தன் இறுதிக் காலத்தில் தன்னிடம் மிகுந்திருக்கும் பொருள்களைப் பிராமணர்க ளுக்கும் அரசைத் தன் பிள்ளைகளுக்குமே விட்டுச் செல்லவேண்டு மென்றும், உள்ளும் புறமும் கவடின்றி, மேலினத்தாரைத் தாழ்த்திச் சொல்லாமல், அவர்களுக்குத் தம் வாழ்க்கை முழுவதும் மேலான அடிமையாயிருந்து மனமகிழ்ச்சியடைபவனே முதல்தரமான 'சூத்திரன்' என்றும், இனக்கலப்பே அறத்துக்குக்கேடு என்றும், நான்காம்

இனத்தவர் பேசும் அத்தனை மொழிகளும் 'மிலேச்ச' மொழிகளே என்றும், சமற்கிருதமே தேவமொழி என்றும், சூத்திரர்கள் ஒரோவொருகால் சமற்கிருதத்தைக் கற்றுக்கொண்டாலும் அவர்கள் அடிமைகளாகவும் திருடர்களாகவுமே ஆவார்கள் என்றும், இவர்களனைவரும் ஊருக்கு வெளியிலும், மரத்தடிகளிலும், தோப்பு துரவுகளிலும், இடுகாடு சுடுகாடுகளிலும், மலைமடுவுகளிலுமே வாழ்ந்திருக்க வேண்டுமென்றும், இவர்கள் எந்தவகையான மாழை(உலோக) ஏனங்களிலும் புழங்கக் கூடாதென்றும், இவர்கள் உண்ணுவதற்கு உடைந்த சட்டிகளையே வைத்துக் கொள்ளுதல் வேண்டுமென்றும், பிணங்களுக்கு இடுகிற துணி வகைகளையே இடுப்புவரையில் அணியவேண்டுமென்றும், பொன், வெள்ளிகளை நகைகளாக இவர்கள் அணியக் கூடாதென்றும், இரும்பு, பித்தளைகளாலான நகைகளையே இக் குலத்துப் பெண்டிர்கள் அணிந்துகொள்ள வேண்டுமென்றும், இவர்கள் மார்புக்கு எவ்வகையான துணிகளையும் அணியக்கூடாதென்றும், எப்பொழுதும் கடினமான தொழில்களைச் செய்தே பிழைக்க வேண்டுமென்றும், இவர்கள் நாய், கழுதைகள் தவிர மாடு முதலியவற்றை வளர்க்கக் கூடாதென்றும், இவர்களைப் பிறர் தீண்டவே கூடாதென்றும், இவர்களுக்கு வேலைக்காரர்களைக்கொண்டே சோறிட வேண்டுமென்றும், இதுவே பிரமன் கட்டளையென்றும், சூத்திரன் சுண்ணும்பு வீடே கட்டக்கூடாதென்றும், வீட்டிற்குக் கதவே வைக்கக்கூடாதென்றும், படித்த சூத்திரனும் மதம்பிடித்த யானையும் ஒன்று என்றும், அதனால் சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் அறிவைக் கொடுக்கவேகூடாதென்றும், பிராமணன் எந்தக் காலத்திலும் உழவுசெய்யக்கூடாதென்றும், உழவுத் தொழில் உலகில் உள்ள தொழில்களெல்லாவற்றிலும் மிகத்தாழ்ந்த தொழில் என்றும், அதைச் சூத்திரர்களைக் கொண்டே செய்விக்க வேண்டுமென்றும் இன்னும் பல வாறுகவும் பார்ப்பனர்களுக்கு நன்மையாகவும் பிறருக்குத் தீமையாகவும் மிக விழிப்பாகவும் கரவாகவும் மனுநூலில் எழுதப் பெற்றுள்ளன.

இவற்றை எதற்காக இவ்வளவு விரிவாக எடுத்துக் கூறினேம் என்றால் அக்காலத்திலிருந்து இக்காலம் வரையிலும் இந்த அடிப்படையான கொடுமைகளையே உலக நெறிமுறையாகக் கொண்டு பார்ப்பனர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதை விளக்கிக்காட்டவே! இத்தகைய நெறிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகும் அரசர்களையே அவர்கள் வாழ்த்தினர் என்பதற்கும், அவ்வாறு அல்லாதவர்களை அவர்கள் சூழ்ச்சியாலும், விரகாலும் தாழ்த்தினர் என்பதற்கும் தமிழக-

வரலாற்றிலும் இந்திய வரலாற்றிலும் ஏராளமான சான்றுகள் உள. தப்பித்தவறி அவர்களின் விரகுக்கும் சூழ்ச்சிக்கும் ஆட்படாமல் தமிழறம் புரந்த தமிழரசர்களின் வரலாற்றை மாற்றியெழுதி அவ் வரலாறுகளையும் தங்களுக்குத் துணையாக்கிக்கொண்டனர். 'மனுநீதி கொன்ற சோழன்' என்ற ஒருவனின் வரலாற்றை "மனுநீதி கண்ட சோழன்" என்னும் பெயராக மாற்றி. அவர்களின் அடிப்படையான எண்ணங்களில் பிறர் ஐயுருவண்ணம் திறமையாக நடந்துகொண்டனர். தாங்களே நிலத்தேவர்கள் என்றும், தங்களிடமே இவ்வுலக ஆட்சியைப் 'பிரமன்' ஒப்படைத்தான்' என்றும் எழுதிவைத்துக் கொண்டு செயல்படும் இவர்களின் கரவும், எத்தும், புரட்டும் இன்றுகாறும் தொடர்ந்தே வருகின்றன.

தமிழரை மொழியாலும், செயலாலும், அரசாலும், கல்வியாலும் அடிமைப்படுத்தி, உலகாண்மை முழுவதும் தங்கட்கே உரியன என்று வக்கணை பேசி ஏய்த்துக் கொண்டு வரும் இவ்வாரியப் பார்ப்பனர்தம் கேடுகளை எடுத்து ஒவ்வொன்றாக விரித்துரைப்ப தென்றால் ஏடும் காலமும் போதா. "கருநிறக் காக்கைக்கும் கல் நெஞ்சப் பார்ப்பனர்க்கும் உருவத்தில் மாற்றம்வேறொன்றில்லை", என்று பழம்பாடல் ஒன்று கூறுகின்றது. இவையெல்லாம் பழங் கதைகள் என்று கூறித் தள்ளுமாறில்லை.

அண்மைக் காலம்வரை அவர்களின் ஆகாத போக்கிற்குப் போராடிய குமுகாயத் தொண்டர் பலர். இராவண்ணன் காலம் முதலாக இக்கால் பெரும் அளவில் குமுகாயப் போராட்டம் நடத்தி வரும் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் காலம்வரை இவர்களின் வல்லாண்மை ஓங்கியே வந்திருக்கின்றது. தன்மான இயக்கமும் பகுத்தறிவுக் கொள்கையும் வலிமிகுந்த இவ் விடைக்காலத்தில், மக்கள் ஒருவாறு பார்ப்பனரின் கொடுமைக்கும் சூழ்ச்சிக்கும் ஆட்படாமல் விழிப்புற்றனர் எனினும், இக்கால் அச்சூழ்ச்சியும் கரவும் மேலோங்கி வருவதைப் பார்த்தால் நம்போன்றவர்கள் வேறெதிலும் நாட்டம் செலுத்த வியலாமற் போகின்றது.

இற்றை மீண்டும் இப் பார்ப்பனியம் தலையெடுக்கத் தூண்டு கோலாயிருப்பவர்களுள் திரு. இராசாசியும், அவர்தம் குலக்காவலரான காமகோடி பீடாதிபதி சகத்குரு சங்கராச்சாரியார் அவர்களும், அவரைச் சார்ந்தவரும் பிற தமிழ் அடிமைகளுமே யாவர். அவர்களுக்கு உள்ள நோக்கமெல்லாம் அரசியல் பற்றியதுமன்று; பொருளியல் பற்றியது மன்று. அவர்களுக்கிருக்கும் ஒரே கவலை தம் இனம் துன்புறக்

கூடாது; தம் இனத்திற்கிருக்கும் தேவத்தன்மை குறைக்கப்பட்டு விடக்கூடாது என்பதுதான். இக்கொள்கை முறியடிக்கப்படும் பொழுது அதன் எதிர்புறத்திலிருப்பவர் காந்தியானாலும் சரி, வேறு எவரானாலும் சரி; அவர்களை அழிப்பதே அவர்களின் முழுநோக்க மாகும். திரு. இராசாசி அவர்கள் இக்கால் அறம் பிறழ்ந்து விட்டது என்றும், அவ்வறத்தைச் சரி செய்யவே இதுநாள்வரை இறைவன் தம்மைப் பிழைக்கச்செய்துகொண்டு வருகின்றான் என்றும் அண்மையில் குறிப்பிட்டுள்ளார். இவர் அறம் என்று கூறியதற்கு அடிப்படைப் பொருள் இக்கட்டுரையின் முற்பகுதியில் கூறப்பெற்ற மனுநூலின் ஒழுகலாறுகளே! இவையெல்லாம் அறங்கள் என்று அவரடி சாரும் மடயர்களேயன்றி, தன்மானம் உள்ள எவனாகிலும் ஒப்புவானா?

திரு இராசாசி அவர்கள் 1938-இல் பதவியில் இருந்தபொழுது 2500 பள்ளிக்கூடங்களை மூடியதற்கும், மீண்டும் பதவிக்கு வந்த 1952-ஆம் ஆண்டில் 6000 பள்ளிங்கூடங்களை மூடியதற்கும், சமற்கிருத மொழியைக் கற்பிக்கவே இந்தியைக் கட்டாயமாக ஆக்கினேன் என்று கூறியதற்கும், இம்மனுநூலில் கூறப்பட்ட ஒழுகலாறுகளே காரணமாக இருந்தன என்று கூறாமலிருக்கமுடியுமா? மேலும் இவர் மூடிய அத்தனைப் பள்ளிகளும் சிற்றூர்ப் புறங்களில் இருந்தவையே! அவற்றில் படித்துவந்தவர்கள் எல்லாரும் தமிழப் பிள்ளைகளே; அஃதாவது இவர் கருத்துப்படி சூத்திரப் பிள்ளைகளே! இவ்வளவு பள்ளிக்கூடங்களையும் மூடியதல்லாமல் மிகுதியிருந்த பள்ளிகூடங்களில் படித்துவந்த மாணவர்களுக்கும் அரை நேரப் படிப்புப் போதுமென்றும், மிகுந்த அரை நேரத்தில் அப்பிள்ளைகள் அவனவன் அப்பன் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சட்டம் செய்தாரே அதற்கும் இம் மனுநூல்தானே காரணமாக இருக்கமுடியும்.

இக்கால், அவர் மூடிய அத்தனைப் பள்ளிகளும் திறக்கப் பெற்றதுமன்றி, மேற்கொண்டும் பல்லாயிரக்கணக்கான பள்ளிக் கூடங்கள் திறக்கப்பெற்றதையும், பள்ளி இறுதி வகுப்புவரை இலவசக்கல்வி புகட்டப்படுவதையும், இனிக் கல்லூரிவரை இலவசக் கல்வி புகட்டப்பெற இருப்பதையும், இவ் வேந்து(வசதி)களால் பார்ப் பனரல்லாத பிள்ளைகள் படித்து முன்னேற வாய்ப்புள்ளதையும் கண்டு-தானே வயிற்றெரிச்சல் தாளாது ஆட்சியே குட்டிச்சுவராய்ப் போய் விட்டது என்று குதிக்கின்றார். இவர் உள்ளப் புழுக்கத்தைப் புரிந்து கொண்டன்றோ 'மெயில்' முதலிய பார்ப்பன ஏடுகளும் பல்கலைக் கழகப் படிப்பு என்பது யாருக்குத் தகுதி இருக்கிறதோ அவர்கட்கு மட்டுந்தான் தரப்படவேண்டும் என்றும் 'தரத்தைக் கெடுக்கும்வகை யில் கண்டவர்களுக்கும் படிப்பைக் கொடுத்துவிடக்கூடாது என்றும் பின்பாட்டுப் பாடுகின்றன.

கல்வியின் தரங்கெட்டுப் போனதற்குக் காரணங்கள் பல. அதன் இழப்பைத் தங்களின் வயிற்றுப் பிழைப்புக்கு ஊதியமாகக் கருதிக் கொண்டு கதைக்கும் இத்தகைய. எழுச்சிகளுக்கெல்லாம் என்ன காரணம்? எங்குப் பார்த்தாலும் 'சமஸ்கிருத சதஸ்,' 'ஆகம சில்ப வியாஸ பாரத வித்வத் சதஸ்' என்றும் பலவாறான பார்ப்பனர்களெல் லாரும் ஒன்று சேர்ந்துகொண்டு பழமைக்கு வித்திடுவதும் அழிந்து விட்டதாகக் கூறும் இந்திய பழக்க வழக்க(சம்பிரதாய)ங்களை யெல் லாம் புதுப்பிக்க முயற்சி செய்வதும் எதைக் காட்டுகின்றன? தங்கள் தங்கள் கைக்குக்கிட்டிய செய்தித்தாள்கள், பதிப்பகங்கள், வானொலிக் கூடங்கள், நாடகமேடைகள், காலக்கழிப்பு(காலட்சேப) மேடைகள் எல்லாவற்றிலும் சமற்கிருத மொழியை வளர்க்கவும் பரப்பவும் படு குழிக்கு வித்திடும் பார்ப்பன நெறிமுறைகளை வளர்ப்பதும், மக்க ளிடையே செல்வவாக்கிழந்துவரும் இராமாயண, பாரதப் பழங்கதை களைப் பேசி அவர்களை மதிமயக்குகளில் ஆழ்த்திவருவதும் எதைக் குறிக்கின்றன? அரசினர் சார்பில் இயங்கி வரும் தொழிற்கூடங்கள், திட்டத் தொழில்கள் முதலிய யாவற்றிலும் தங்கள் தங்கள் இனத்தா ரான பூணூல் திருமேனிகளையே அமரச்செய்வதும், அவர்களுக்கு ஏதாகிலும் ஒரு தீங்குவரின் உடனே உயர்நெறி மன்றம், தலைமை யமைச்சர், குடியரசுத் தலைவர் முதலிய பேரிடங்களில் முறையிடு வதும் எதனைக் காட்டுகின்றன? தமிழகத்துள் பார்ப்பனர் மீண்டும் தங்கள் கைவரிசைகளைக் காட்டத் தொடங்கிவிட்டனர் என்பதைத் தானே? இவையெல்லாவற்றிற்கும் காரணமென்ன?

தமிழன் மொழியடிமைப்பட்டு அரசியல் அறியாமையுள் அழுந்தி பதவிப்பித்து தலைக்கேறி, தன்னலத்திற்காகத் தன் மனைவி, மக்கள், நாடு, நலங்கள், மொழி, முன்னேற்றங்கள் முதலிய யாவற்றையும் அடகுவைக்கத் துணிந்துவிட்டான் என்பதாலன்றோ மீண்டும் பார்ப் பனீயம் தலையெடுத்து வருகின்றது. இவற்றைப்பற்றி எல்லாம் எண்ணுகையில் நமக்கு ஆக்கவேலைகள் எவற்றிலும் கவனம் செல்லுவதில்லை. அரசியல் காரணங்களுக்காகச் சாணக்கிய மூளை களை அணைக்கத் துணிகின்ற தமிழர்களே! பதவிப்பித்திற்காகக் கழுதைகளின்பின் கற்பூரந் தேடிப்போகும் குருடர்களே! நீங்கள் மானமுள்ளவர்கள் தாமா? இனநலம் காப்பவர்கள்தாமா? உங்களால் தமிழும் தமிழரும் முன்னேற வழியுண்டா? எண்ணிப் பாருங்கள்!

— பெருஞ்சித்திரன்.

## திருத்திப்படிக்க.

இம்மாத அட்டைப்படத்தில் மடங்கல் (புரட்டாசி) என்றிருப்பதைக் கன்னி (புரட்டாசி) என்று திருத்திப் படித்துக்கொள்க.

# ஓர் அறிக்கை.

முதலில் கொள்கைக்காக ஓர் இதழை நடத்தவேண்டுமெனில் வருமானத்தை எதிர்பார்க்கக்கூடாது. அதுவும் போலிக்கொள்கைகளும், கட்சியாரவாரங்களும், தலைமைப் பித்துகளும் நிறைந்த நம் நாடு போன்ற ஒரு நாட்டில், நடுநிலையாக ஒரு கருத்தைச் சொல்லி, எல்லாரிடமும் பகைமையை வாங்கிக் கட்டிக்கொள்ளத் துணிந்தவன் ஓர் இதழ் நடத்தவேண்டுமானால், அவன் நூற்றுக்கு நூறு பங்கு இழப்பை எதிர்பார்த்தே முன்னங்காலைத் தம் பாதையில் வைத்தல் வேண்டும். அதுவுமன்றி, மொழிப்பேதைமையும், அரசியல் அடிமையும் நிறைந்த நம் நாட்டில் தனித் தமிழில் ஓர் இதழ் தொடங்க முயலுவானானால் - அவனைப்போன்ற (மெய்ம்மைப்)பித்தன் வேறெவனும் இருத்தல் முடியாது. இனி, இவற்றைவிட கண்டிப்பும் தன் மதிப்பும் துணிவும் கொண்ட ஒருவனுக்கு மெய்யான துணையும் வாய்ப்பது குதிரைக் கொம்பு! இத்தகைய சூழ்நிலையில் எவரும் துணியாத ஒரு வேலையை - தொண்டை நாம் துணிந்து நடத்துகையில் நம்மைத் 'தன்னலமுள்ளவன்' என்றும், 'தனித்தமிழ்ப் போர்வையில் வயிறு வளர்ப்பவன்' என்றும் சில அடிமைகள் கதைத்துத் திரிவது நமக்கு நகைப்பையே விளைவிக்கின்றது. இதழ் நலத்தையே காவாமல் இடர்ப்படும் ஏந்திய கொள்கையர் தந்நலத்தைக் காப்பதற்குப் பொழுது எங்கிருக்கின்றது? பொருள்தான் எங்கிருக்கின்றது? மொழித் திறம் முட்டிய அம்மூங்கைகள் ஒரோ வொருகால் தென்மொழியைப் பழித்துயிர் வாழ்வதை நாம் அகமும் புறமும் புலப்பட நன்கு அறிவோம். அறிந்துஅவர்கள் அறியாமைக்கு இரங்கியுமிருக்கின்றோம்.

கொள்கைக் கூன் கொள்ளாத நம்மைப் பேராயக் கட்சியின் கையாள் என்று விழிப்பறிவு அற்ற அக் கழிப்பறை மக்களுள் சிலர் பழியுரைத்துத் தென்மொழியின் அதைந்த நடையுள் புதைந்து போக முன்வந்துள்ளனர். தமிழகமன்று, இந்தியா முழுமையையும் நமக்கு வழி வழிப் பட்டயமாக எழுதித்தர முன்வரினும், நிமிர்ந்த கொள்கையினும் நேரிய போக்கினும் திமிர்ந்த வினையினும் துளியும் நழுவாத நம்மைப் பணம், பதவியெனும் எலும்புத் துண்டங்கட்கு எழுபிறவியும் அங்காந்து, அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களே போன்ற அக் கொள்கைப் பதடிகள் பேராயக் கட்சியின் கையாள் என்று தூற்றித் திரிவதுபற்றி நாம் எள்ளத் துணையும், எறும்பின் தலையத் துணையும் கவலைப்படவில்லை.

நம் கருத்துக்களை நாம் கூறும் காரண கரும எண்ணங்களோடு பொருத்தி, மறுத்துரைக்கும் மதுகையற்றவர்களே வெறுத்துரைக்க முற்படுகின்றனர். அரசியல், பொருளியல் குமுகாய நிலைகள்பற்றி நாம் கூறும் உண்மைகளை அவர்களும் அவரை நடத்துவிக்கும் தலைவர்களும் அகத்தே ஒப்புவாராயினும், புறத்தே தம் போலிப் பெருமைக்கும் கூலிச் சிறுமைக்கும் தடையாக நிற்குமென்றஞ்சியே நம் கருத்தோடு நேருக்கு நேர் பொருதா தொழிகின்றனர். அக்கால் அவர்தம் புல்லியராகிய இவ்வெள்ளியர் தாம் உள்ளியவாறெல்லாம் எள்ளியுரைத்து மகிழ்ந்து மனக்கூழ் குடித்து நிற்கின்றனர். ஆனால் அத்தகையார் தம் நாத்தூற்றலுக்குச் செவியகம் கொதித்த செம்மாப் பினர் பலர், சொல்லறை அறைந்து மல்லறை தரவும் எம் இசைவு கேட்டுப் பல மடல்களும் கட்டுரைகளும் விடுத்த வண்ணமாயுளர். அவர்தம் நேரிய நெஞ்சும் சீரிய கொள்கையும் கண்டு நாம் மகிழ்ந்தோ மெனினும், அவர்தம் அரிய பொழுதையும், உரிய திறத்தையும் இத்தகைய புல்லியர்தம் வெள்ளுரைகளில் செலுத்துதல் கண்டு மிகவும் வருந்தினேம். நம் நோக்கம் நம்மைத் தூற்றுவோர்க்குக் கூற்றுவ தன்று; போற்றுவோர்க்கு ஊற்றுவதுமன்று. அல்லற்பட்டு ஆற்றாது நிற்கும் அறிவு மிதிபட்டாரைச் சொல்லாலும் செயலாலும் பரிந்தேற்று, அவர்தம் கூனிய கொள்கையை நிமிரச் செய்வதும், அவர்தம்மை அறிவினும் நடையினும் மானியர் ஆக்கலுமே ஆகும்.

ஆர்த்துப் புடை நிரம்பி, நுரைநுங்கிக் கரை புரண்டோடும் கான்யாற்றுக் கடுநடையின் விசை பொருத அக்குடுக்கையர், அக்கரை யோரத்துப் பொதிந்த மண் திட்டுகள் போன்றும், அவற்றின்மேல் குத்திட்டு நிற்கும் நாணல் போன்றும், கடுநீர் துமிப்ப அடிகரைந்து தலைசாய்ந்து விழுவர் என்பது வரலாறு. எனவே இனி அத்தகையார். அரற்றலையும் மிரட்டலையும் தூசென மதித்துப் புறந்தள்ளி அவற் றிற்குச் செவி தராது, செவி தரினும் உளம் தராது, உளம் தரினும், உணர்வு தராது, உணர்வு தரினும் அறிவு தராது அமைந்திருக்க எம் பாங்காயினரை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

– பெருஞ்சித்திரன்.

# முத்த வித்து!

துரை-மாணிக்கம்.

அத்தைக் கொரே மகள் உண்டு - அவள்
ஆன எழிற்கு உருவாக இருந்தாள்!
முத்தைச் சொன்ஞல் அவள் பல்லாய் - அதில்
மூத்த கள் ஞூறுதல் எங்கணும் உண்டோ?
கத்துங் குயிலிசை தன்னில் - இளங்
காதல் மயக்கந்தான் மூளுதல் உண்டோ?
பித்துப் பிடித்தவன் போல - இளம்
பேட்டிஜன அன்ஞெருரு நாளில் வளைத்தேன்.

"கொத்தும் என் உள்ளத்தைப் பாராய் - அது
கூறும் மருந்திஜன நீவந்து தாராய்!
செத்துக் கொண்டேவரு கின்றேன் - உடல்
தென்பு குறைந்ததென் அண்டையில் நில்"லெனப்
புத்தம் புதுவுரை சொன்னேன்; - அவள்
"போவீர்; மருத்துவர்தம்மிடம் சொல்வீர்;
தொத்திக் கொள்ளும் கொடுநோயோ? - பெருந்
தீப்பிணியோ அத்தான்" என்ருள்; வியந்தேன்!

"இல்லையடி, கிளிப் பெண்ணே! - இது
யாராலும் தீர்க்காத நோக்காடாம்" என்றேன்.
தொல்லையத்தான் மிகத் தொல்லை - பெருஞ்
சாக்காடு தான்; சுடு காடுதான்" என்ருள்!
"முல்லைப் பெண்ணே! உன்றன் பார்வை -எழில்
மூண்டென் உடல்வந்து தீண்டிய நோயை
சொல்லில் விளக்குவ துண்டோ? - அடிச்
சொல்க" வென்றேன்; புரி யாதவள் நின்ருள்!

"தந்தை இவரெனச் சொன்ஞள் - என்
தாய்; இந்த நோயிஜனச் சொல்ல மறந்தாள்.
முந்தை மொழியறி வித்தார்; - இதை
மொழியாமல் தந்தைஏன் மூடி மறைத்தார்?
வந்தும் அறிந்திடக் காணேன்! - உமை
வாட்டிய நோயினுக் கென்பெயர்?" என்ருள்;
சொந்தம் பயின்றதென் உள்ளம்! - வாய்
சொன்னது காதல் எனுங்கனிச் சொல்லை!

"காதலென் ருலென்ன?" வென்ருள் ; - "உன்
கன்னத்தை நீட்டு; நான் காட்டுவேன்" என்றேன்.
தோதறி யாதவள் வந்து - கனிச்
சுவைதருங் கன்னத்தைக் காட்டிநின் ருளே !
மாதுளை முத்துச் சிவப்பில் - என்
மாயிதழ் தோய்த்திட தோளை அணைத்தேன் !
"யாதுசெய் தாய் ?"எனக் கூறி - என்
அத்தை வந்தாள் ;உளம் செத்துநின் றேனே !

நாலைந்து நாட்கள்சென் ருேட, - ஒரு
நாளில் அவள்வீட்டு வாயிலிற் சென்றேன் ;
நூலிடை வாடிட ஓடி - ஒரு
நொடிதங்கி, மீண்டும் வெளிவந்து நின்று,
பாலாடை போலொரு தாளை - என்
பக்கலில் வீசினள் ; ஓடி எடுத்தேன் ;
சேல்விழி கூருத சொல்லை - அவள்
சின்ன விரல்களோ தீட்டின கண்டீர் !

"கன்னத்தில் ஊன்றிய வித்து - பெருங்
காதல் மரமாகி நிற்கின்ற தத்தான் !
மின்னலைப்போல் அது மின்ன - என்
மேனி குலுங்கிக் குலையுதே அத்தான் !
கன்னல் கசக்குதென் கண்கள் - எக்
காட்சியும் காண மறுத்தன அத்தான் !
இன்னுந் தயங்குவ தேனே - வந்து
என்னை மணப்பீர் ; அணைப்பீர் ! - உம் ஏழை !"

**தமிழ்ச்சிட்டு**

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்.

**தனியிதழ் 15 காசு.**

ஆண்டுக் கட்டணம் (மலருட்பட) 2 உருபா.

ஒரு படிக்கு 30 காசு முன்பணம் கட்டும் முகவர்கள்
உடனே விண்ணப்பிக்க.

அமைச்சர்.

**தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.**



# மக்களவை

## விகடனின் 'தமிழ்த்தொண்டு'

அன்புடையீர்!

உணவுப் பொருள்களில் கல்லையும் மண்ணையும் சேர்த்துக் கலப்படம் செய்பவர்களைத் தக்கவாறு தண்டித்தல்வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடில்லை. ஆனால் ஒருமொழியில் இன்னொரு மொழியின் சொற்களைக் கலந்துவேண்டுமென்றே மொழியின் தனித் தன்மையையும் தூய்மையையும் கெடுத்துத் தீங்கு செய்பவர்களைப் பற்றியோ எவரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

'செத்துங் கொடுத்தான் சீதக்காதி' என்று சொல்வார்கள். ஆனால் சமற்கிருதமோ செத்துங் கெடுத்துக் கொண்டிருக்கிறது நமதருமைத் தாய்மொழியாம் தென்மொழியை. 'கிடப்பதெல்லாம் கிடக்கட்டும்; கிழவியைத் தூக்கி மணையில் வையுங்கள்' என்று சொல்வது போல சமற்கிருத மொழிக்கு 'உயிரூட்டும்' பணியாற்றப் புறப்பட்டிருக்கிறது ஒரு கூட்டம். அரசினரும் பெருந்தொகை ஒதுக்கித் தந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றனர். இவை பற்றியெல்லாம் கூட நமக்குக் கவலை இல்லை. தனி மொழியாம் தமிழில் சமற்கிருதச் சொற்களை ஒல்லும் வகையெல்லாம் கலந்து மொழியை வளர்ப்பதாகக் கூறிக்கொண்டே மொழியின் தூய்மையைக் கெடுத்து வருகிறார்களே அவர்களைப் பற்றி நாம் கவலைப்பட்டே ஆகவேண்டும். இத்தகைய திருக்கூட்ட மரபில் தோன்றி மொழிக்கலப்படம் செய்து கொண்டிருக்கும் கிழமை இதழ்களில் 'ஆனந்த விகடனும்' ஒன்று.

சில திங்கள்கட்கு முன்னர் விகடனில் வெளியான சிறு கதை ஒன்றை எடுத்துக் கொள்ளுவோம். கதையின் தலைப்பு 'அப்பாவின் வேஸ்டி' என்பது. 'வேட்டி' என்னும் சொல் தூய தமிழ்ச் சொல்லாக இருக்கவும் 'வேஸ்டி' என்னும் சொல் எழுதியமை ஏன்? தமிழில் துணிகளைக் குறிக்கத் 'துண்டு' 'துணி' அறுவை' முதலிய சொற்கள் உள்ளன. துண்டு செய்யப் படுவது துண்டு; துணிக்கப்படுவது துணி; அறுக்கப்படுவது அறுவை. அவ்வாறே வெட்டப்படுவது வேட்டி

இவ்வாறு தனித்தமிழ்ச் சொல்லான வேட்டி என்னும் சொல்லிருக்கவும் 'வேஸ்டி' என்று எழுதவேண்டிய இன்றியமையாமை என்ன வந்தது? இச்செயல் 'மொழிக்கலப்படம்' செய்யும் நோக்கமேயன்றி வேறு யாதாக இருக்க முடியும்? அடுத்து, கதையை எழுதினாரே அவர்தம் பெயரைக் கவனிப்போம். கதையாசிரியர் புனைபெயருக்குள் மறைந்து கொண்டிருக்கிறார். அதுபற்றி நமக்கு அக்கறையில்லை. அவர்தம் புனைபெயரைப் பார்த்தால் தூய சமற்கிருதமாக இருக்கிறது. அப்பெயர் 'ராஜ்யஸ்ரீ' என்பது. 'ராஜ்யஸ்ரீ' (எழுதுவதற்கே கைகூசுகிறது) என்னும் பெயர் பலுக்கமுடியாமலும் பொருள் விளங்காமலும் இருக்கிறதே என்று எண்ணுகிறீர்களா? அதுபற்றி 'அவர்களுக்குக்' கவலை இல்லை. (இத்தகைய வாய்நுழையாப் பெயர்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் தாம் தமிழுக்கே உரிய தனித்தமிழ்ப் பெயர்களையும் சொற்களையும் நாம் பயன் படுத்தினால் புரியவில்லை; எளிமையாக இல்லை என்று எதிர்க்கின்றனர்! 'அவர்கள்' நோக்கமெல்லாம் இயன்ற அளவு சமற்கிருதச் சொற்களைத் தமிழில் கலந்துவிடவேண்டுமென்பதே; இல்லையென்றால் எத்தனையோ அழகிய தமிழ்ப் பெயர்கள் இருக்க 'ராஜ்யஸ்ரீ' என்னும் சமற்கிருதப் பெயரை வைத்துக்கொள்ள வேண்டிய இன்றியமையாமை என்ன?

கதையில் வரும் பெயர்களைப் பற்றியோ சொல்ல வேண்டுவதில்லை. கதையில் வருபவர்களுடைய பெயர்கள் வருமாறு: ராமு, ஜானு, கோபு, ராஜம்மா என்பனவாம். தமிழ்நாட்டில் தமிழ்ப் பெயர்களுக்குப் பஞ்சமோ என்னும் எண்ணம் எம்முள்ளத்தில் எழுகின்றது. இனிக் கதையைப் பார்ப்போம்:

கதையின் தொடக்கம் இது: குளியல் ஆயிற்று, குளிர்ந்த ஜலம் 'ஜில்' லென்று இருந்தது. ராமுத்தாத்தாவின் தளர்ந்து தொய்ந்து போன உடம்பு தண்ணீரின் குளிர்ச்சியைத் தாங்க மாட்டாது 'வெட வெடென' ஆடியது. ஸ்ரீ ராமபிரானின் நாமத்தைச் ஜபித்தபடி தம் அறைக்குள் செல்ல அவர் ரேழியினுள் நுழைவதற்கும் அவர் மருமகள் ஜானுமாவும் கையும் பாத்திரமுமாக வருவதற்கும் சரியாக இருந்தது...' கதையின் தொடக்கமே இவ்வாறு இருக்குமானால் கதை முழுதும் எவ்வாறு இருக்கும் என்பதை அன்பர்கள் உய்த்துணரலாம்.

கதையில் வரும் சமற்கிருதச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் பின்வருமாறு: 'மஹான், ஸ்ரீ ராம சீதா கல்யாணம், பௌராணிகர், பிரவசனம், திவ்யம், உபன்யாசம், கோதண்டராமன், பாலிக்கல், நைலக்ஸ், பாம்பே மல் வேஸ்டி, டிராங்க் பெட்டி, லேசு,

சமஸ்கிருதம், ஸ்ரீ ராமஜெயம், டெரிலின், நைலான், ரேஷன், ஆபீஸ் ப்யூன், பாண்ட், ரிகார்டு ரூம், கஷ்டம், ராமபக்தர், ரவிக்கை, ஜரிகை, அங்கவஸ்திரம், நிஜக் கல்யாணம், ஸ்வாமி, நமஸ்காரம், ரவிகுல சோமன், முக்யம், முதலியன கதையில் வரும் உரையாடல்கள் எல்லாம் பார்ப்பனர் வீட்டுப்புழக்கச் சொற்களில் அமைந்துள்ளன.

அரும்பாடுபட்டு இவ்வளவு சமற்கிருதச் சொற்களையும் சில இடங்களில் ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்திய ஆசிரியர் கதையில் விளக்கும் கருத்துத்தான் என்ன? கதை இதுதான்: ராமுத் தாத்தா செல்வர்கள் வீட்டில் 'ராமாயணக் கதையைப் படித்து அழகுத் தமிழில் பொருள் கூறுபவராம். (அழகுத் தமிழ் இதுதானோ?) அன்று செல்வர் ஒருவர் வீட்டில் சீதராம கல்யாணமாம்', ஆகவே 'ரொம்ப ரொம்ப முக்ய' நாளில் கட்டிக்கொள்ள என்று வைத்திருந்த 'வேஸ்டி'யைத் தம் 'டிரங்க்' பெட்டியில் தேடுகிறாராம். ஆனால் அவர் மருமகளோ அதை எடுத்துக் கிழித்து வடாம் உலர்த்தப் பயன்படுத்தி விட்டாளாம். அதற்கு அவள் கணவனும் உடந்தையாம். (வேட்டியின் ஒரு மூலையில் சமற்கிருதத்தில் 'ஸ்ரீ ராமஜெயம்' என்று எழுதப் பட்டிருந்ததாம்). வருத்தம் மிகுந்த பெரியவர் பழைய வேட்டி துண்டோடு 'சீதராம கல்யாணம்' நடத்தப் போய்விடுகிறாராம். ஆனால் அன்றைக்கே மருமகளின் விலையுயர்ந்த புடவையை எருமை மாடு தின்றுவிடுகிறதாம். அலுவலகத்தில் அவள் கணவனுடைய (பெரியவருடைய மகன்) விலையுயர்ந்த 'சிங்கப்பூர் பேண்ட்' ஆணி பட்டுக் கிழிந்து விடுகிறதாம். வடாம் வேப்பிலை விழுந்து கெட்டு விடுகிறதாம். இத்தனைக்கும் காரணம் 'ராமபக்த'ரான பெரிய வரின் 'மனசு கஷ்டப்பட்டதே ஆகுமாம். 'ராமபிரான்' அவர் களைத் தண்டித்துவிட்டாராம். ஆகவே, பெரியவரிடம் இருவரும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறார்களாம். ஆனால் பெரியவரோ பெருந் தன்மையோடு நடந்துகொள்கிறாராம். அன்று 'சீதராம கல்யாணத்தில்' தாம் பெற்ற பட்டுப் புடவையையும் 'ஜரிகை வேஸ்டியையும்' மருமகளுக்கும் மகனுக்கும் கொடுக்கின்றாராம்...! இதுவும் ஒரு சிறந்த கதையென்று முத்திரை (!) தாங்கி வந்திருக்கிறது!

இதுதான் 'விகடன்' தமிழுக்கும் தமிழ்ச் சிறுகதை இலக்கியத் திற்கும் செய்யும் தொண்டா? தமிழ் மக்களை எண்ணிப் பார்க்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

சேலம்
27 - 8 - 66

அன்புள்ள,
ப. செல்வி.



# கொட்டடா பறை!

## பாவேந்தர் பாரதிதாசன்

இசை : மோகனம். தாளம் : ஆதி.

நற்றவம் பலித்ததே ஒற்றுமை பெற்றோம்
அற்றதே பகைஎன்று கொட்டடா பறை
உற்றதே விடுதலை கொட்டடா பறை!

அற்றைநாள் இப்பெருந் தமிழுலகம் ஆண்டோம்
இற்றைக்கும் நாம்அந்த நிலையினைப் பூண்டோம்
வெற்றி முற்றுமே பெற்றோம்நாம் தமிழர்
வியப்பில்லை என்று கொட்டடா பறை!
புகழ்க்கெல்லை இல்லை கொட்டடா பறை!

நாம்பெற்ற விடுதலை மணிக்கொடி காப்போம்
நானிலம் காப்போம் கெடுதலைத் தீர்ப்போம்
தேம்பலா வாழை மாவெனும் முத்தமிழ்ச்
செழுங்கனி வழங்குவோம் கொட்டடா பறை
முழுதுல கும்பெறக் கொட்டடா பறை!

ஒருவன் நாட்டை ஒருவன் பறிக்கும்
உள்ளப் போக்கைத் தமிழன்கை நறுக்கும்
அருள்ஒன்றே சட்டம்! மக்கட்கே ஆட்சி!
அமைதி நிலைஎன்று கொட்டடா பறை!
தமிழர் கொடைஎன்று கொட்டடா பறை!

# நூற்சுருக்கம்

## உலகின் முதற் செம்மொழி
## (The primary classical language of the world)

மொழிநூற் பேரறிஞர் பண்டித, புலவ, கலைத்தலைவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது.

**மொ**ழிநூல் அறிவுக்கு வரலாற்றறிவு இன்றியமையாதது. வரலாறு எழுதப்பட்டதும் எழுதப்படாததும் என இருவகைத்து. கிறித்தவ ஊழிக்குப் பிறதுள்ள தமிழக வரலாறு நன்றாகவே எழுதப் பட்டுள்ளது. அதற்கு முன்புள்ள வரலாறு பற்றி ஆராய்ச்சிகளும் சரி யாக மேற்கொள்ளப்படவில்லை. ஆராய்ந்தோரும் வடமொழிச் சார் பில் நின்றமையின் பல பிழைகள் செய்துள்ளனர். பொதுவாக, எழு தப்படாத வரலாறு அழிந்து போய்விடுகின்றது. இல்லையேல். வெறும் வண்ணனையாகவோ, கதை போலவோ தான் எஞ்சுகின்றது. தமிழினம் அல்லது திராவிட இனம் கடல் கோட்பட்ட இலெமூரி யாவைப் பிறந்தகமாகக் கொண்டுள்ளமையாலும் ஆரியர் வருகைக்கு முன்னும், வேதகாலத்துக்கும், கழகக் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்திலும் தோன்றிய தமிழ் நூற்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டமையால், கிறித்தவ ஊழிக்கு முந்திய தமிழக வரலாறு இன்று வெறும் வண்ணனை நிலையிலேயே அமைந்துள்ளது. நினைவுக் கெட்டாத காலந் தொட்டுத் தமிழரின் பிறந்தகமாகிய இலெமூரியா வில் தோன்றி வளர்ந்த உலக முதன்மொழி தமிழே. இலெமூரியா கடல் கோட்பட்டதனால் தமிழரின் பழமைக்குப் புதை பொருட் சான்று களைத் தேடிப் பயனில்லை. தமிழரின் உண்மை வரலாற்றுக்குக் கடல் நூலும், மண்ணியலுமே துணை செய்யவல்லன. (அவை நமக்கு எட் டாதனவாக) தற்பொழுது நமக்குச் சான்றுகளாக உதவுவன எல்லாம் தமிழ் மொழியும் தமிழிலக்கியமுமே!

தமிழ் என்னுஞ் சொல் முதற்கழகத்துக்கு முன்பிருந்த தமிழரின் மொழிக்கு வழங்கி வந்த தமிழ்ப் பெயராகும். தமிழ், தமிழன் என் னுஞ் சொற்களே பின்னர், திரமில, திரமிள, திரமித, திராவிட என

வட இந்தியாவில் திரிந்து வழங்கின. முதலில் இவை தமிழ் மொழியையே குறித்தன. தமிழினின்று பிரிந்து பிற திராவிடக் கிளை மொழிகள் வளர்ச்சி பெறத் தொடங்கியது கிறித்தவ ஊழித் தொடக்கத்திலேயேயாதலின் திரவிட என்ற சொல் அவற்றையே குறித்தது என்பதிற் பொருளில்லை. வடமொழி தென்மொழி என்னும் வழக்குகள், அக்காலத்தில் இரண்டு மொழிகள் ஒன்று வடக்கிலும் ஒன்று தெற்கிலுமாக வழங்கியதால் ஏற்பட்டனவாகத்தான் இருக்க வேண்டும். தமிழகத்தில் 5-ஆம் நூற்றாண்டினதான புத்தர்களின் தமிழ்க் கழகம் 'திராவிட சங்கம்' என்றழைக்கப் பட்டதும், 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிள்ளை உலோகாச்சாரியார் என்பார் தமிழிலக்கியத்தைத் 'திரவிட சாத்திரம்' என்று குறித்துள்ளதும் 18-ஆம் நூற்றாண்டினராகிய தாயுமானவர் தமிழைக் குறிக்கத் திராவிடம் எனுஞ் சொல்லைப் பயன் படுத்தியுள்ளமையும் திராவிடம் என்ற சொல் தமிழைக் குறிப்பதே என்பதை ஐயமற நிலைநாட்டுகின்றன.

தமிரிசு, (Damirice) திமிரிசு (Dymirice) திமிரிகா திமலா, தமலா, தமுலிகா என்று பிறமொழி வரலாற்றாளர்களாலும், பிற வரலாற்றுக் குறிப்புகளிலும் பழங்காலத்தில் குறிக்கப்பட்டது தமிழே. இவற்றுளெல்லாம் முந்தியது 'திரமில', அல்லது 'திரமிள' என்பதாகத் தெரிகிறது. திரவிட என்ற சொல் அதன் பிற்பட்டதே. திரமிள என்பதே 'தமிழ்' என்ற சொல்லுக்கு நெருங்கியதாயிருப்பது வெளிப்படை. வடமொழி, தமிழ்ச் சொற்களை உரிததாக்கிக் கொள்ளுங்கால் சொல்லின் தொடக்கத்திலுள்ள மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் பிரித்து இடையில் ஒரு "ர்" ஒலியைச் செருகியோ, அல்லது அம்மெய்யெழுத்தின் உயிர்ப் பொலியை நீக்கி 'ரி' என்னும் ஒலியைச் செருகியோ கொள்வது வழக்கமாயிருக்கின்றது.

| எ. கா. | தமிழ் | சமற்கிருதம் | தமிழ் | சமற்கிருதம். |
|---|---|---|---|---|
| | படி | பிரதி | புடவி | பிருத்வி. |
| | பவளம் | பிரவாளம் | மதங்கம் | மிருதங்கம். |

தமிழ் திரமிள என்று சமற்கிருதத்தில் வழங்கியது இம்முறைப் படியே! கால்டுவெல் கண்காணியார் இவ்விரு சொற்கட்கும் உள்ள நெருக்கத்தை உணர்ந்தும், சரியாக உணராமல் திரமிள என்பதே தமிழ் என்று திரிந்தது எனத் தலைகீழாக உரைத்துப் போந்தார். இம் மயக்கத்தாலேயே அத்தொடர்பில் அவர் கருத்துகள் அனைத்தும் பிழை

யாயின், கழக இலக்கியங்களையோ, தமிழின் இலெமூரியப் பிறப்புப் பற்றியோ அவர் அறிந்தவர் அல்லர்.

தமிழ் என்பதற்குப் பல விளக்கங்கள் கூறுவர். தம்–இல் என்பதே தமிழ் என்றுயிருக்க வேண்டும்; இவ்விளக்கமே பொருத்தமாகத் தோன்றுகின்றது. தம்-இல் மொழி "தம் இல்லத்திற் பேசப்படும் மொழி" என்று தமிழர் தமிழைக் குறித்திருக்க வேண்டும். நாளடைவில் 'மொழி' என்ற சொல் மொழிக்குப் பெயராகவே ஆகிவிட்டிருக்க வேண்டும். தமில் என்பது தமிழ் என்றுவது இயல்பே. ஒ. நோ. மால் – மழை. கல்–காள்–காழ்.

திராவிட என்ற சொல் 'தமிழ்' எனுஞ் சொல்லின் மற்றோர் வடிவமே என்றாலும், நாளடைவில், தென்னிந்திய மொழிகள் அனைத்துக்கும் ஒரு பொதுப் பெயராய் வழங்கத் தொடங்கியது. ஆதலின், பர். கால்டுவெல் பிற்றைத் தென்னிந்திய மொழிக் குடும்பத்தைக் குறிக்கையில் திராவிட என்ற சொல்லையும், அவற்றுள் தனித்தன்மை வாய்ந்த தமிழைக் குறிக்கத் தமிழ் என்ற சொல்லையும் பயன் படுத்தியுள்ளமை பொருத்தமுடைத்தே. கால்டுவல் காலத்தில் தமிழைத் திராவிட மொழிக்குடும்பத்தினின்று தனித்துப் பிரித்தெடுத்து ஆய்வதற்குத் தேவை எழாதிருந்தது. இன்று அத்தேவை எழுந்துள்ளது. அதற்குக் காரணங்கள் (1) தமிழின் உயர்வும் பெருஞ்சிறப்பும் பற்றிய விரிந்த அறிவு; (2) இன்றைய மொழிவழி மாநிலப் பிரிவு; (3) தமிழ் ஒன்று மட்டுமே ஆரியங்கலவாத் திராவிட இலக்கியக் கூறுபாடுகட்கு இன்று இடனாக விருப்பது! (4) பிற திரவிட மொழிகள் வடமொழி பற்றிக் கொண்டுள்ள எண்ணப்போக்குக்குத் தமிழரின் எண்ணப் போக்கு நேர் மாறாக இருப்பது. (5) பிற திராவிட மொழிகள் தமிழோடு மீண்டும் வந்தொன்ற முடியாதபடி ஆரிய மயமாகி விட்டமை; (6) பிற திராவிட மொழிகளுக்குள் 'தூய்மை' என்பது மருந்துக்கும் காணமுடியாத பொழுது, 'தூய்மையே' தமிழுக்கு உயிர் நிலையாக இருப்பது; (7) பிற மொழிக்கில்லாத தமிழின் மிக எளிய ஒலிப்பு முறை தமிழை ஒரு தனிப் பிரிவாகக் கொள்ள இடந்தருவது.

இவ்வேறுபாடுகளின் காரணமாகத் திராவிடம் என்ற சொல் தமிழல்லாப் பிற திராவிட மொழிகளைக் குறிக்க விட்டுவிடுவோமாயின், தமிழையும் பிற திராவிட மொழிகளையும் ஒருசேர்த்துக் குறிக்க ஒரு புதிய சொல் தேவைப்படுகின்றது. "தமிழிக்" என்று ஐரோப்பியர்கள்

பயன்படுத்திய சொல்லினின்று 'தமிழிக' என்ற ஒரு சொல்லை நாம் வருவித்துக் கொள்ளலாம். இந்நூலில் இனி 'தமிழிக' என்ற சொல் தமிழையும் பிற திரவிட மொழிகளையும் சேர்த்துக் குறிக்கவும், திராவிட என்ற சொல் தமிழையல்லாப் பிற திராவிட மொழிகளைக் குறிக்கவும் பயன்படுத்தப் பெறும்.

தமிழ் உயர்தனிச் செம்மொழியே யாயினும், அதன் ஒலியியல் மிக எளியதேயாம். குழவிகளும், நோயாளரும், முதுகிழவரும் கூடத் தடுமாற்றமில்லாது பலுக்க எளிதானபடி முப்பது முதலொலிகளும், மூன்று சார்பொலிகளும் மட்டுமே தமிழில் உள்ளன. சார்பொலிகளுள் இரண்டினை 'இ' 'உ' இவற்றின் துணையொலிகளாகக் கொள்வோமாயின், தமிழிலுள்ள மொத்த ஒலிகள் முப்பத்தொன்றே! இவ்வாறு உலகச் செம்மொழிகளுளெல்லாம் ஒலியியற்படி மிக எளிமையானது தமிழே.

திராவிட மொழிகளிலுள்ள பெரும்பாலான சொற்களின் வேர்கள் எல்லாம் தமிழிலேயே இருக்கின்றன.

எ. டு.

| தமிழ். | மலையா. | கன். | தெலுங்கு. | துளு. | கா. | கோண்டி | வேர் |
|---|---|---|---|---|---|---|---|
| ஒன்று | ஒன்னு | ஒண்டு | ஒந்து, ஒக்கட்டி. | ஒஞ்சி | ஒந்தா. | உண்டி | ஒல் |
| வர், வா, | வா, | பா. | ரா. | பா, | பரா. | வரா. | வள். |
| வாய், | வாய் | பாய் | வாயி. | ... | ... | ... | வழி |
| போ | போ | போகு | போவு. | ... | ... | ... | புகு. |

தமிழின் தூய்மை, முந்தியமை, சொல்வளம் தனித்தன்மை முதலிய சிறப்பியல்புகள் பற்றிக் கால்டுவெல் தம் ஒப்பிலக்கண நூல் முன்னுரைப் பகுதியில் விரிவாகக் கூறியுள்ளார். இன்று தமிழின் தனித்தன்மை உணரப் படாமைக்குக் காரணம், ஆரியர் வருகைக்கு முன்பிருந்த தனித் தமிழ் நூல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுப் போனமையே. ஆயினும் கிடைத்திருக்கும் தமிழ் நூல்களில் முந்தியவற்றை ஆய்ந்தாலும் போதும்; தமிழ் மொழியும் இலக்கியமும் வடமொழிச் சார்பு உடையன அல்ல என்பது எளிதில் தெரியும்.

மண்ணியல் ஆய்வுகளின் வாயிலாக வெளிவரும் உண்மைகளும் தமிழரின் முன்மையையே புலப்படுத்துகின்றன. பனிமலைப் பகுதியை

விட்த் தென்னிந்தியாவின் நிலப்பகுதி முன்மையும் பழமையும் வாய்ந்ததாகும். தென்னிந்தியாவும்; ஆத்திரேலியா, தென்அமெரிக்கா, அன்டார்டிக்கா நிலப் பகுதிகளும்; முன்பு, இப்பொழுது இந்தியப் பெருங்கடல் இருக்கும் வழியாக இணைக்கப் பட்டிருந்தன என்பதை வரலாற்றுசிரியர்கள், மண்ணியல் விலங்கியற் சான்று கொண்டு நிறுவியுள்ளனர்.

இன்றும் ஆரியர் வருகைக்கு முன்பிருந்த இந்தியப் பண்பாடு தென்னகத்தில்தான் கெடாமல் இருக்கின்றது. தமிழர்கள் தென்னகத்துக்கே உரியவர்கள் என்பதும் வரலாற்றுலும், உயிரியல், மாந்தவியல், உடற் கூற்றியல் முதலியவற்றுலும் நிறுவப்பட்டுள்ளது. தமிழர்கள் தென்னகத்துக்கே உரியவர்கள் என்பது மொழிநூற் சான்றுகளால் நன்கு நிலைநாட்டப்படுகின்றது. இன்றும் தமிழகத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லச் செல்லத் தமிழின் பழைய சொல் வடிவங்களையும் ஒலிப்பு முறைகளையும் காணமுடியும். திருநெல்வேலியில் வாழும் உழவர் மக்களின் பேச்சிலேயே இப்பழைய வடிவங்கள் இன்றும் நிலைபெற்று நிற்கின்றன. அவர்களால் இன்றும் வடமொழித் தொடர்புடைய ஒலிகளைச் சரியாகப் பலுக்க முடிவதில்லை. 'ஜாதி', 'சாக்ஷி' என்பன அவர்கட்கு வாரா. அவர்கள் ஒலிப்பதெல்லாம் 'சாதி', 'சாக்கி' என்றுதான்.

திருநெல்வேலித் தமிழே வளமானதும் தூய்மையானதுமாக உள்ளது.

**வளத்துக்குச் சான்றுகள்:**

இலக்கு – குறித்த இடம்.
ஊருணி – ஊரார் குடிநீர்க் குளம்.
சாம்புதல் – நெடுநாள் வைத்திருந்தால் உணவு கெட்டுப்போதல்.
நீன் – நீ.
தக்கலை – சரியான பாடம்.
வாழ்வரசி – கணவனோடு வளமாக வாழ்பவள்.

முறத்தைப் பயன் படுத்துவதில் நான்கு படிநிலைகள் உள்ளன. நாவுதல், கொழித்தல், புடைத்தல், தெள்ளுதல் என்பன அவை. இன்றும் இச்சொற்கள் நெல்லையில் வழங்குகின்றன. பிற பகுதிகளிலோ, நாவுதல் என்பதன் சிதைவான 'நோம்புதல்' அல்லது 'நேம்புதல்' என்ற சொல் மேற்கண்ட நான்கு நிலைகளுக்கும் வேறுபாடு இல்லாமல் பொதுச் சொல்லாக வழங்குகின்றது.

தூய்மைக்குச் சான்றுகள் :

| திருநெல்வேலியில் | வடக்கு மாவட்டங்களில் |
|---|---|
| உருமம். உச்சிவேளை : | மத்தியானம் (வ) |
| தவசம். | தானியம் (வ) |
| துப்புரவு | சுத்தம் (வ) |
| பண்ணையார் | மிராசுதார் (உ) |
| பகுதி | கிஸ்தி (உ) |
| மிதிவண்டி | சைக்கிள் (ஆ) |
| வங்கி | பிச்சுவா (உ) |

தேரி –மணற்குன்று, காயல் – உப்பங்கழி,

காடைக்கண்ணி – காடைக் கண்போன்று நிறமும் வடிவம் உடைய தினை வகை.

குதிரைவாலி – குதிரைவால் போன்று கதிரையுடைய தினைவகை.

இச்சொற்களும் திருநெல்வேலிக்கே யுரிய சொற்களாம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகைத்திணை நிலப் பிரிவுகள் இன்னும் தமிழகத்தில் பொருந்துமாறுள்ளன. நாகரிக வளர்ச்சி காரணமாக ஒரு சில மாறுதல்கள் ஏற்பட்ட பொழுதினும், பெரும்பாலும், திணைநில மாக்களும், புட்கள் விலங்குகளும், கூல வகைகளும் பிற விளைபொருட்களும், வாழ்க்கை முறைகளும் கழகநூற்களிற் கூறப்பட்டதனைப் போலவே இன்றும் இருப்பது தென்னகத்திலேயே! கழக இலக்கியத்தில் மிகச் சிறப்பாக வண்ணிக்கப்பட்டுள்ள ஆறு பருவங்கள் – இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி ஆகியவை – இன்றும் தமிழகத்தின் இயற்கைக்குப் பொருந்துமாறுள்ளன.

மக்கள் இவ்வாறு ஐவகையாகப் பிரிந்து வாழ்ந்த பொழுதினும் அவர்கள் இனத்தாலும் மொழியாலும் ஒரு கூட்டமாகவே இருந்தனர். பின்னர் முடியாட்சி தோன்றிய பின்னர் மொழி ஒன்றுக நிலைப்படுத்தப்பட்டது.

புதைபொருள் ஆராய்ச்சிகளின் வாயிலாய், தமிழகத்தில் நாகரிக வளர்ச்சி பழங்கற்கால முதற்கொண்டு தற்காலம் வரை எவ்வித இடையீடு மில்லாமல் படிப்படியாக மண்ணோடு பொருந்தி வளர்ச்சியுற்று வந்துள்ளது என்பதற்குப் பல சான்றுகள் காணக்கிடக்கின்றன.

(தொடரும்)

# தமிழே! வாழ்க உன் புகழ்!

புலவர் து. அ. சீனிவாசன் சேலம்-2.

(வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா.)

நல்லறிவோர் நல்லிணக்கம் நாடிடவே நண்ணுவித்துப்
பல்லறிவோர் நல்லவைக்கண் பெருமையுறப் பண்பூட்டி,
அறநூலு மவையுரைக்கும் அறநெறியும் அகத்திருத்திப்
பிறநூலும் பலசெய்தி பிறவெல்லாம் பிறங்குவித்து
முதறிவோர் முந்துரைத்த மும்மையுடன் முடிவில்லாத்
தீதறுமோர் திருவீடு தடையின்றித் தந்திடுவோய்!

அருந்தவத்தாற் பெறலரிய அறிவெல்லாம் நிலைகொண்ட
பெருந்தொல்காப் பியநூலும் பெருமைமிகு திருக்குறளும்
தருந்தமிழ்ச்செம் மொழியேஉன் தகவினமே ணுட்டாரும்
அருந்திடினும் அகமலர்த்தும் அருஞ்சுவையுன் சுவையாமோ!

அகம்புறமே நம்பெருமை; அவைதாமே நம்வாழ்வு;
முகந்தளவு கொளவைக்கு முதன்மையவென் றறிவுடையோர்,
பத்தெட்டும் பதினெட்டும் பாங்குறவே செய்திட்டார்;
வித்திட்டும் விளையாத இவையுன்றன் விளையாட்டோ!

இறையன்பால் அகங்கரைய இம்மையினும் மறுமையினும்
இறைவன்பால் இணைவிக்கும் இணையில்நூல் இழையுடனே
சொல்லரிய சிலப்பதிகா ரமிழ்ததனே டேனயவும்
பல்குவியல் எனக்குவிந்த இவையுன்றன் படைப்பாமோ!

மாதுறு தகையொடு மனநிறை புடையைநீ;
கோதறு நிலையொடு கொலுவுடை வலியைநீ;
தீதறு கெனமிகு துயர்களைந் திடுகுவை:
பேதுறு நிலையறும் பெருநிலை தருகுவை.

மருளறு மதிவளர் நிலைமிக நெறிதரல்;
இருளறு நிறைகொடெம் இறைவயின் நிலைதரல்;
தெருளுறு முறைமையில் திறமுடன் அலந்தரல்;
அருளுறு வகைமையில் அகநிறை மலர்தரல்.

இனபல பெருமையும் இயலுறு வகைமையும்
எனவுள தமிழ்மொழி! நினதரும் எழிலினை
எனவகை யெழுதுதல் எனவறி கிலர்பலர்!
நினபுகழ் நெறிமையின் உரைதர வியலுமோ?

கலையுரு நனிமிக வுலைவற நிலையினை;
கலைபல நினதக நிலைபெற வுலவினை;
விலையறு மணியென வொளியுற மிளிர்ந்தனை;
மலிவுறு நினதெழில் பொலிவுற மிகுந்தனை

இனிவீயா நிலைநல்கும் ஏறுய ரமிழ்தத்தின்
நனிசாயா நிலைகொண்டோய்! உனைச்சாய்ப்பார் நிலையென்னே!

கெடுவானே தான்கெடுமுன் கெடுக்கலா மென்றெண்ணி
விடுவானே யவனுக்கு வீடுண்டோ வுரையாய்நீ

முடிமன்னர் மடிவளர்ந்த மணிமொழியே நீ வாழ்க!
கடி நன்னர் சுவையுடையோய் கனிமொழியே நீ வாழ்க!
வைவார்க்கும் வாழ்வளித்து வளந்தருவாய் நீவாழ்க!
மெய்யார்க்கும் மெய்ம்மையினை பொய்மையிலாய் நீ வாழ்க!

தெருளூட்டு நூலொருபால்; அருளூட்டு நூலொருபால்;
மருளோட்டு நூலொருபால்; இருளோட்டு நூலொருபால்;
நீவாழ்க வெனவொருபால்; உனைமாய்க்குஞ் செயலொருபால்;
இறைபோற்று நிலையொருபால்; முறைபோற்று நிலையொருபால்.

இறையு நீ; முறையு நீ; அருளு நீ; தெருளு நீ;
அறமு நீ; பொருளுநீ; இன்ப நீ; இனியைநீ;
உறவு நீ; உலகு நீ; உயிருநீ; உடலுநீ;
அரச னீ; அரசிநீ; அன்புநீ; பண்புநீ;

எனவாங்கு,

பூமலி சோலையின் புதுமணம் போல
நாமலி பல்கலை நூற்பல தந்தாய்.
எழுத்தொடு சொல்லும் எண்டகு பொருளும்
வழுத்தொடு நாவலர் வளம்பெற வாங்கி
நிலத்தொடு முந்துநூற் கண்டார்.
நலத்தொடு வாழ்க! வாழ்கவுன் புகழே!

# நுரையீரல் புற்றுநோய்
# BRONCHOGENIC CARCINOMA

பொ. குமாரசாமி, சா. க. பழனிசாமி.

**தொடக்கவுரை:**— புற்று நோய் அல்லது புதுவளர்ச்சி என்பது தற்கால மருத்துவ உலகிற்கே பெரிய அறைகூவலாக வுள்ள பல கொடிய நோய்களுள் தலைமையானதாகும். இந்நோய் நுரையீரல் எலும்பு, இரைப்பை, நாக்கு போன்ற பல உறுப்புகளிலும் தோன்றக் கூடியது. இந்நோயை நாடுவதில்தான் தற்போதைய மருத்துவ உலகம் வெற்றி கண்டுள்ளது; ஆனால் இந்நோயின் முதல் நாடுவதி லும், அது தணிக்கும் வாய் நாடுவதிலும் இன்னும் பின் தங்கியுள் ளது. இந்நோயின் கரணியம் பற்றிய பல கருத்துகளில் எதுவும் முழுக்க முழுக்கப் பொருந்துவதாயில்லை. இந்நோய் தணியக் கண் டுள்ள பல மருந்துகளிலும், மருத்துவ முறைகளிலும் எதுவும் முழுப் பயனளிப்பதாகவும், நம்பகமானதாகவும் இல்லை. இத்தகைய நோயின் வகைப்பட்ட நுரையீரல் காற்றுச் சிறுகுழலில் ஏற்படும் புற்று நோய் (Bronchogenic Carcinoma) பற்றி இங்குச் சிலவற்றைக் காண் போம்.

**நோயின் கரணியம்:** மேற்கூறியபடி இந்நோயின் கரணியம் இன்னும் புரியாத புதிராகவே யுள்ளது. நுரையீரல் புற்றுநோய் புகை பிடிப்பவர்களிடம் அதிகமாகக் காணப்படுகின்றது. அதாவது நாளொன்றுக்கு ௨௦ (20) வெண்சுருட்டுகளுக்கு மேல் புகைப்பவர் களிடம், புகையே பிடிக்காதவர்களை விட ௫௦ (50) மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. இப்படிக் கூறும்போது புகை பிடிப்பவர்கள் எல் லாருக்கும் புற்று நோய் வருமென்றும் கூறிவிட முடியாது தொடர்ச்சியாக ஏறத்தாழ ௧௫ (15) ஆண்டுகளுக்குப் புகை பிடித்து வருகின்ற ஒருவருக்குப் புற்று நோயே வராமலுமிருக்கலாம். புகை யிலையில் "3 : 4 பென்சுபைரின்" — [3:4 Benzpyrene] என்ற புற்றுநோய் உண்டாக்கக் கூடிய பொருள் உள்ளது. இதே வேதியம் பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வரும் புகையிலும் கலந்துள்ளது. புகையிலையைப் பதப்படுத்தப் பயன் பெறும் 'ஆர்சனிக்' (Arsenic) என்ற மாழையும் புற்றுநோய் உண்டாக்கக்கூடிய தன்மையதே.

இந்த 'ஆர்சனிக்' மாழை வெண் சுருட்டைச் சுற்றிலுமுள்ள தாளிலும் கலந்துள்ளது. கதிர் விச்சுச் சுரங்கங்களில் (Radio-Active Mines) வேலை செய்பவர்களிடமும், வெப்பமான கரி நெய் (தார்) புகையி லை வேலை செய்பவர்களிடமும், இந்நோய் மிகுதியாகக் காணப்படுன்றது.

இந்நோயின் அறிகுறிகள்:

(க) இருமல்: இஃது இந்நோயின் முதல் அறிகுறியாகும். இது தொடக்கத்தில் வறட்டிருமலாகவிருக்கும். பின்னர் நெஞ்சுச் சளியுடன் கூடியதாக இருக்கும். இச்சளி மிக வழவழப்பாகவும், மாறுபாடுற்ற குருதி கலந்திருப்பதால் சிறிது கருமையாகவும் இருக்கும். ஒரோவழி கடின உழைப்பிற்குப் பின் இருமலுடன் குருதி மட்டும் வரலாம்.

(உ) மார்புவலி: இஃது இருமலுக்கடுத்த அறிகுறியாகும். இவ் வலி விலா எலும்புகளையடுத்து ஏற்படும். நாளாக நாளாக முகாமை யாக ஆழ்ந்த உள் மூச்சின் போதும், இருமும் போதும், சிலசமயங் களில் பேசும்போதுங்கூட இவ்வலி மிகும். இவ்வலியால் தூக்கம் பெரிதும் கெடுக்கப்படும். இவ்வலியே, முதன்மையாக இந்நோயின் முதிர்ச்சியைக் காட்டும்.

(ங) சo (40) முதல் கூo (60) வரை அகவை யுடையவர்களுக்கு நுரையீரல் அழற்சி ஏற்படலாம். சo (40) அகவைக்கு மேற்பட்டவர் களுக்கு நுரையீரல் அழற்சியும், காய்ச்சலும் அடிக்கடி ஏற்படின், அவை நுரையீரல் புற்று நோயால் ஏற்பட்டவையா, அல்லது வேறு கரணியங்களாலா என்று நன்கு ஆய்ந்து காணவேண்டும்.

(ச) நடுத்தர அகவைக்கு மேற்பட்டவர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்படலாம். இது சிறிது சிறிதாக மிகும்.

(ரு) இந்நோய் வந்தார்க்கு எடை குறையும். இது பெரும் பாலும் நோய் முதிர்ந்த நிலையிலேயே தென்படும். ஆனால் எடைக் குறைவேற்படுமுன்பே இந்நோயைக் கண்டு பிடித்தாக வேண்டும். ஏனெனில் சிலசமயங்களில் எடை குறையாமலே யிருக்கலாம்; அல்லது எடை குறையத் தொடங்கும் காலத்திலேயே நோயாளி இறந்தும் விடலாம்.

நோயின் முதிர்ந்த நிலையில் தென்படும் அறிகுறிகள்:

இந்நிலையில் இந்நோய்க்கு அறுவை மருத்துவம் பயன் தராது. சில புது வளர்ச்சி யெதிர்ப்பு மருத்துகளால் இந்நோயின் கடுமையைத் தடுக்க முயற்சி செய்யலாம்.

(க) குரல் நாணிற்கு (Vocal Cord) வரும் நரம்புகள் இப்புது வளர்ச்சியின் அழுத்தத்தால் செயலிழந்து விடுவதால் 'குரல் காகரப்பு' (Hoarse Voice) ஏற்படும்.

(உ) இப்புது வளர்ச்சியால், மார்பிலிருந்தோ, கைகளிலிருந்தோ, அல்லது தலையிலிருந்தோ வரும் சிரைகள் (Veins) தடைப்படலாம். இதனால் குருதி நெஞ்சாங்குலைக்கு எளிதாகச் செல்லமுடியாமல் தேங்கி நிற்குமாதலால், கைகள், மார்பு, வயிறு, முகம் ஆகியவற்றில் உள்ள சிரைகள் தடித்துக் காணப்படும்.

(ங) (1) இப்புது வளர்ச்சியால் 'சிம்பதிடிக்' (Sympathetic) நரம்பின் மேல் பகுதி (Cervical Part) அழுத்தப்பட்டுச் செயலிழப்பதால், அப்பக்கத்தில் கண் மேலிமை செயலிழந்தும், கண் குழி விழுந்தும் (Enophthalmus) கண்மணி சிறுத்தும், அப்பாதி முகத்தில் வெயர்வை சுரக்காததால் தோல் வறண்டும் இருக்கும். (2) வேகசு (Vagus) என்ற நரம்பு அழுந்தப் பட்டு நெஞ்சுத் துடிப்பு குறையும். பின்னர் அந்த நரம்பு மிகையான அழுத்தத்தால் செயலிழக்கும் போது, நெஞ்சத் துடிப்பு மிகுந்தும், சீரின்றியுமிருக்கும். (5) வயிற்றையும், மார்பையும் பிரிக் கும் 'பிரிதசை' (Diaphragm) க்குச் செல்லும் நரம்பு அழுத்தத்தால் செயலிழப்பதால், அத்தசையும் செயலிழந்துவிடும். இதனால் வயிற் றின் அப்பகுதி, உள்மூச்சின் போது உள்ளிழுக்கப்படுவதற்கு மாருக, உள் மூச்சின்போது வெளித்தள்ளப்படும்.

**ஆய்வுகள்:** இந்நோய்க் கண்டு பிடிப்பை உறுதிப்படுத்த மார்புப் 'புதிர்க் கதிர்ப்படம் (X-Ray) எடுத்து ஆராய வேண்டும். மார்புச் சளியை நுண் பெருக்கி மூலம் ஆராயவேண்டும்.

**மருத்துவம்:** நுரையீரல் புற்று நோய்க்குத் தற்போதையவற்றில் தலை சிறந்த மருத்துவம் அறுவை மருத்துவமே. இதன் மூலம் புற்று நோயுற்ற ஒரு நுரையீரலையோ, அல்லது நசிக்கப்பட்ட அதன் ஒரு பகுதியை மட்டுமோ நீக்கிவிடலாம். இவ்வறுவை மருத்துவத்திற்கு எந்த மருந்து மருத்துவமும் நிகராகாது. ஆனால் அறுவை மருத்து

வத்திற்கு இந்நோய் இளநிலையிலேயே கண்டு பிடிக்கப்படல் வேண்டும். நோய் முதிர்ந்த நிலையிலோ, நோயாளியின் உடல் மிகவும் வலுவிழந்திருந்தாலோ, அல்லது இரு நுரையீரல்களிலும் இந்நோய் பற்றியிருந்தாலோ அறுவை மருத்துவம் செய்யலாகாது. இந்நோய்ப்பட்ட பகுதிக் கண்மையிலுள்ள நெஞ்சாங்குலை உறையோ (Pericardium) பிரிதசையோ, அல்லது மார்புச் சுவரோ தாக்கப்பட்டிருந்தால் அவற்றையும் சேர்த்து நீக்கிவிடலாம். ஒரே ஒரு நுரையீரலோடு நலத்துடன் வாழ முடியுமாதலால், ஒரு நுரையீரலை யிழப்பதைப் பற்றிக் கவலுற வேண்டியதில்லை. அறுவை மருத்துவத்திற்குப் பின் ஆறே கிழமைகளில் நோயாளி பொதுவான வேலைகளைச் செய்யும் நிலைக்கு வந்துவிடுவான்.

அறுவை மருத்துவம் செய்ய முடியாவிடத்து 'ஆழ் புதிர்க் கதிர்ப் பண்டுவம்' (Deep X-Ray-Therapy) அளிக்கலாம். ஆனால் இப் புது வளர்ச்சி மூளை, கல்லீரல், எலும்பு போன்ற இடங்களுக்குப் பரவியிருந்தாலோ, இந்நோய் நுரையீரல் காற்றுச் சிறு குழலிலுள்ள சுரப்பிகளிலிருந்து தோன்றியதாக (Adenocarcinoma) இருந்தாலோ இம்முறையும் ஏற்றதன்று.

ஆழ் புதிர்க்கதிர் செலுத்தவியலாவிடத்து "நைட்ரசன் மஃச்டர்டு," (Nitrogen Mustard) என்ற புது வளர்ச்சித் தடுப்பு மருந்தைக் கொடுக்க வேண்டும்.

**நோய்த் தடுப்பு:** இந்நோய் புகை பிடிப்பவர்களிடம் மிகுதியாகக் காணப்படுவதால் மக்கள் புகை பிடிப்பதைத் தடுக்க வழி செய்யவேண்டும். சாலைகளுக்குக் கரிநெய் (தார்) போடுவதை விட்டுச், சுதைச் (Cement) சாலைகள் போடவேண்டும். தொழிற்சாலைப்புகை மக்களைத் தாக்கா வண்ணம் தடுக்க வேண்டும். இவற்றால் இந்நோயின் தோற்றத்தை ஓரளவு குறைக்கலாம். ஆனால் முழுக்க முழுக்கத் தடுப்பதென்பது முடியாது. கரணியமே சரியாக தெரியாவிடத்துத் தடுப்பது பற்றிக் கூறமுடியுமா?

**முடிவுரை:** மருத்துவத் துறையின் கட்டுக் கடங்காமலிருக்கும் புற்று நோயைக் கட்டி யடக்க மருத்துவ வல்லுநர்கள் பல்லாற்றானும் முயன்று வருகின்றனர். தீராத கொடிய நோய்கள் என்று ஒரு காலத்தே சொல்லப்பட்ட தொழு நோய், உருக்கி நோய் போன்றவை எப்படி முழுமையான அளவில் தீர்க்கப் படுகின்றனவோ அதுபோலப் புற்று நோயும் தீரும் நாள் வருமானால் அது மருத்துவத் துறைக்கே பெருந்திருப்பமான நாளும், பொன்னான நாளுமாகும். O

# ஆங்கில மொழியாக்கம்

## நான்மணிக்கடிகை NANMANIKKADIGAI.

‘கள்வம்’ என்பார்க்கும் துயில் இல்லை; காதலி மாட்(டு)
உள்ளம்வைப் பார்க்கும் துயில் இல்லை; ஒண்பொருள்
செய்வம் என் பார்க்கும் துயில் இல்லை; அப்பொருள
காப்பார்க்கும் இல்லை துயில். 7

They have no sleep, who contemplate a theft;
They have no sleep whose hearts are on their sweet-hearts dear;
They have no sleep who say “we’ll money make”.;
And those who guard that money, they too have no sleep.

மனைக்குப்பாழ் வாணுதல் இன்மை; தான்செல்லும்
திசைக்குப்பாழ் நாட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றறி வில்லா உடம்பு. 20

Accursed is one’s home when there’s no wife;
Accursed is the direction where one has no friends;
Accursed is the assembly where no elders are.;
And accursed is oneself remaining ignorant.

கண்ணின் சிறந்த உறுப்பில்லை; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர் இல்லை; மாக்களின்
ஒண்மையவாய் சான்ற பொருளில்லை; ஈன்றாளின்
என்ன கடவுளும் இல். 54

Dearer than the eye no organ is;
Closer than a husband no relation is;
Nobler than one’s children no possession is;
And greater than one’s mother no deity’s.

நல்லார்க்கும் தம் ஊர்என் றூர் இல்லை; நன்னெறிச்
செல்வார்க்கும் தம் ஊர் என் றூர் இல்லை; அல்லாக்
கடைகட்கும் தம் ஊர்என் றூர் இல்லை; தம் கைத்து
உடையார்க்கும் எவ்வூரும் ஊர் 81

The good ones have no place to call their own
The Virtuous have no place to call their own
The ignoble have no place to call their own...
And all places are the same for the wealthy, too.

கல்லா ஒருவர்க்குத் தம் வாயின் சொல் கூற்றம்;
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம்
அல்லவை செய்வார்க்கு அறம் கூற்றம்; கூற்றமே
இல்இருந்து தீங்கு ஒழுகுவாள். 82

To the ignorant, the words from his own mouth is death;
To the soft-leaf'd plantain, its own yield is death,
To the wicked th'ethical law is death
And death is she who does defile the purity of home.

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்தில் சினம் குற்றம்; குற்றம்
தமர் அல்லார் கையகத் தூண் 91

To have not learning in one's youth is crime
Liberality in dearth is crime
And wrath in th' absence of kinsfolk is crime
And crime it is to eat at the hands of alien men.

எல்லா இடத்தும் கொலை தீது; மக்களைக்
கல்லா வளர விடல்தீது; நல்லார்
நலம்தீது நாணற்று நிற்பின்; குலம்தீது
கொள்கை அழிந்தக் கடை. 92

Under all circumstances murder's bad.
To bring up children illiterate is bad.
The goodness of the good if shamlessness it brings is bad.
And when one's princibles are gone high birk is bad.

பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

# வறுமைத்தீ வளரட்டும்!

உணர்வுப் பித்தன், விராலிமலை.

தாய்த்தமிழுக் குற்ற தாளாத் துயரினுமா
வாய்த்த வறுமை கொடிது?

இக்கட்டுரையின் தலைப்பைப் படித்தவர்கள் என் மீது சினங் கொண்டு வசைபாடத் தொடங்கலாம். குறிப்பாக மக்களின் ஒட்டிய வயிறுகளையும் உலர்ந்து வறண்டு உணவுக்கு அங்காந்த வாய்களை யுமே முன்னிருத்தித் தம்தம் அங்காடிகளை விரித்து வைத்துக்கொண்டு வாணிகம் நடாத்தும் அரசியல் புரட்டர்களும், கட்சி எத்தர்களும் புலிப் பாய்ச்சல் பாயவே செய்வார்கள். ஆயினும் தமிழனின் இற்றை இழிநிலையையும், அதற்குப் பேரளவு காரணமான பஞ்சம், பசிப்பாட்டு களையும் பற்றி எண்ணிப் பார்க்கும் உணர்வாளர்கள் ஓர் உண்மையை உணரவே செய்வார்கள். அவ்வுண்மை உணர்வின் வெளிப்பாடு இக் கட்டுரையின் தலைப்பாகவே இருக்கும்.

இந்தியாவில் வெள்ளையருக்கெதிராக விடுதலைப் புரட்சி நடந்து கொண்டிருந்த பொழுது, ஒரு வெள்ளைக்காரன் '**நாய்க்கு ஓர் உரொட் டித் துண்டை வீசியெறிவது போல் தமிழனுக்கும் ஒரு வாய்ச் சோற் றைப் போட்டால் அடங்கி விடுவான்**' என்று குறிப்பெழுதி வைத் திருந்தானாம். ஆம்! இற்றைத் தமிழர்கள் (தலைவர்கள் முதல் கடை நிலைத் தொண்டன் வரை) சோறு கிடைத்தால் போதுமென்றே கருது கின்றனர். சோற்றுக்காக மக்கள் அடிமைப் படவும் அஞ்சவும் ஒருப் படுவார்கள் என்பதே இன்றைய அரசியலார் கற்று வைத்திருக்கிற பாடமாகும். ஆகவே இப்போலியர்களை நம்பி வாழும் மக்கள் வறுமை யுற்றுப் பிணியுற்றுத் தொலையுறுகின்ற வரை தன்னாடு, தன்னாட்சி தன்னுரிமை என்ற உரிமை உணர்வுகட்கு ஆட்படார் என்பது வெள் ளிடைமலை.

பொதுமக்களின் உணவுப் பற்றுக்குறையையும், விலையேற்றத் தையுங் காரணங் காட்டி, தேர்தலில் தங்கள் கட்சிச் சார்பாளர்களே ஒப்போலைகளைப் பெறுவதற்காகப் பொது மேடைகளை அதிர அடித் துக் கொண்டிருக்கும் அரசியல் தலைவர்களும் தொண்டர்களும் நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள்தாம் என்பதை எச்சான் றோரும் ஏற்கார். சாதி, மதம், பணம், மொழி போன்றவற்றின் வேறு

பாடுகளால் அமைந்த பல்வேறு கொள்கைகளை வைத்துக்கொண்டு தந்நலத்தோடு பாடுபடும் கட்சியாளரே மிகுந்துவிட்டனர். இத்தகையவர்கள் நாட்டின் பொதுநலனில் அக்கறை கொண்டவர்கள் என்று எங்ஙனம் கூறவியலும்? அப்படியே மக்களின் அடிப்படை நலன்களில் அக்கறை கொண்டு இன்றையச் சிக்கலைத் தீர்க்க அரசியல் கட்சிகள் முற்படுவதாக வைத்துக் கொண்டாலும் பதவி, பணம், தனிநலம் இம்மூன்றையும் அடிப்படையாக வைத்துத்தான் ஒன்றுமறியா மக்களிடம் கவறுட்டம் ஆடவேண்டுமா? அறியாமை நிறைந்த மக்களை ஏய்த்து, பதவிகளைக் கைப்பற்றி நாட்டு வளங்களைச் சுரண்டி எப்படியாவது தம் வாழ்நாளைக் கழித்தால் போதும் என்ற தந்நலப் பற்றோடு உறையுங் கட்சித் தலைவர்களும் அவர்களின் பின்னே அறியாமலே சென்று கொண்டிருக்கும் தொண்டர்களும் மலிந்து கிடக்கும் வரை இந்நாட்டில் விடிவு ஏற்பட்டுவிடும், விழிப்புணர்ச்சி ஏற்பட்டு விடும், உரிமை உணர்வு கிண்டப் பெறும், ஆட்சிச் சிக்கலும், மொழிச் சிக்கலும் தீர்க்கப் பெறும் என்றெல்லாம் யாரேனும் எண்ணத் தலைப்படுவார்களேயானல் அவர்கள் அறியாதவர்கள்; ஏமாளிகள்; ஒன்றுமறியாப் பேதையர் என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை. நாட்டு மக்களின் நலனை உயிர் மூச்சாகக், கொண்ட தலைவர் ஒரு சிலர்களும், தொண்டர்களும் கட்சி சாராவண்ணம் நடுநிலையோடு ஆய்ந்து இத்தகையவர்களுக்கு மாறுக ஏதேனும் உரைக்கவேண்டி வந்தால் "இவர்கள் பழமையில் வாழவேண்டியவர்கள், நாட்டுப் பற்றற்றவர்கள், அரசியல் தெரியாதவர்கள், இத்தகையவர்களால் நாட்டில் எப்பயனும் விளைந்துவிடப் போவதில்லை" என்று அழகாக, சொல்லடுக்குகளாகப் பேசி மக்களை மயங்க வைக்கும் இவர்களின் போலிமையையும், போலிப் பற்றையும் விரைவில் நாட்டு மக்கள் கண்டு கொள்ளத்தான் போகின்றனர். யாரிடம் நாட்டுப் பற்றும், அரசியல் தெளிவும் செயலாண்மையும் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளும் நாள் சேய்மையிலில்லை.

இந்நாட்டில் விலைவாசி ஏற்றத்திற்குக் கரணியம் அரசினர் என்பர் பிறகட்சியினர். பேராயக் கட்சியினரோ வாணிகர்கள் மேல் பழியை ஏற்றுகின்றனர். விலைவாசி ஏற்றத்திற்கு அரசியற் கட்சிகள் அனைத்துமே கரணியங்கள் என்பது நடுநிலையோடு ஆய்வார்க்கு விளங்கும். கட்சிகளைச் சார்ந்தும் கட்சிகளின் துணைக்கொண்டும் கள்ள வாணிகம் செய்வார் பலருக்கும் அரசியற் கட்சியினர் திரை மறைவிலிருந்து

கை கொடுக்கின்றனர். அவ்வாறு திரை மறைவில் கை கொடுக்கும் இவர்கள் பெரும் பரிசு தேர்தல் நன்கொடைப் பணமே. இவ்விழி செயலில் பேராயக் கட்சியினர் பெரும்பங்கு ஏற்கின்றனர் என்பது மறுக்கவியலா உண்மையுமாம். விலைவாசி ஏற்றத்திற்குக் கரணியர் அரசியல் புரட்டர்களே என்பதைப் பேதை மக்கள் அறியாது இவர்களின் போலிப் புனைசுருட்டுகளிலும், சரடுகளிலும் தொல்லையுற்றுக் கவலையுறு நிலையை எண்ணுந்தோறும் வருந்துகின்றோம்.

பேராயக் கட்சியின் தலைமையை ஒழிப்பதில் எல்லாக் கட்சியினரும் முனைந்து நிற்கின்றனரே யொழிய நாட்டு மக்கள் இதுவரை தொல்லையுற்று வரும் மொழிச் சிக்கல் விலைவாசி ஏற்றம் போன்ற சிக்கல்களை அகற்றுவதில் தாம் கொண்ட தந்நலங் கருதாத அக்கறையுணர்வை இதுகாறும் ஒரு கட்சிதானும் வெளிப்படுத்தவில்லை. மக்களின் பற்றுக் குறைகளால் நேரும் அறிவு மயக்கத்தால் ஒருகால் ஆட்சித் தலைமை மாறினும் இதைவிடக் கீழான நிலையே உருவாகும் என்பது தெற்று. சோறு கிடைத்தால் போதும் என்று எண்ணுகின்ற மக்களும், பதவி கிடைத்தால் போதும் என்று எண்ணுகின்ற தலைவர்களும், பணம் கிடைத்தால் போதுமென்று எண்ணுகிற தொண்டர்களும் உள்ளவரை இந்நாட்டில் அரசியல் மறுமலர்ச்சி ஏற்பட்டுவிடும் என்பதும், தொழிலியல் புரட்சி ஏற்பட்டுவிடும் என்பதும் கற்பாறைகளில் நீர் பிழியும் கற்பனை எண்ணங்களே!

அரிசிக்காகவும், அன்றாடத் தேவைகட்காகவும் கால் கடுக்க வெயிலில் நிற்கும் மக்கள் வரிசைகளையும், அங்கே பேசப்பெறும் 'பொரி பறக்கும்' அரசியல் 'வசைச்' சொற்களையும் கேட்கும் அயல் நாட்டான் ஒருவன் , அன்றையத் தேவைப் பொருள் கிடைத்ததும் வீட்டுக்குச் செல்லும் தமிழ் மகன் ஒருபிடிச் சோறு வயிற்றுக்குள் சென்றதும் அடையும் மாற்ற நிலையையும், உண்டு எழுந்ததும், "இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன?" என்று இயல்பாகப் பேசத்தொடங்கி விடுகின்ற பட்டாங்கு (தத்துவங்)களையும் கண்டு கேட்க நேருமானால் ஒன்று வாய்விட்டு அழுவான் அல்லது மனம் விட்டுச் சிரிப்பான்.

இப்படிப்பட்ட குடல் நிரப்புப் பொதுமக்கள் வாழும் வரை பணத்தையும் பதவியையுமே குறிக்கோள்களாய்க் கொண்டுள்ள அரசியல் கட்சிகளின் தந்நலப் பற்று பொதுநலப் பற்றாக விரியவே முடியாது.

தேர்தலில் போட்டி போட்டு ஒப்போலை பெற்றுப் பதவி ஏற்க விரும்பும் இவர்கள் பொதுமக்களிடமே பணம் திரட்ட முனைந்து நிற்கின்ற இழி செயலிலிருந்து நாம் இவர்களின் பொதுநலப் பற்றின் தன்மையை அறியலாம். நாட்டு மக்களின் குருதியை உறிஞ்சும் இவர்களால் என்றும் வறுமை ஒழியப் போவதில்லை. உருசியா, பிரஞ்சு போன்ற நாடுகளில் உருவாகிய நிலையே இங்கும் உருவாகும் வரை பொருளியல் மாற்றங்கள் நிகழவே வாய்ப்பில்லை. உருசியாவும், பிரஞ்சும் உலகில் முன்னேற்றம் பெற்றதற்குக் கரணியம் அந்நாடுகளில் மக்களுக்கு அறவே உணவு கிடைக்காமல்போன வறுமை நிலையும் அதனையொட்டி எழுந்த உரிமைப் புரட்சிகளுமே! பசித்த மக்களின் வயிறுகளில் எரியத் தொடங்கிய உரிமைத்தீ மாபெரும் தொழிற்புரட்சிக்கு உலைக்களனானதையும் வியத்தகு அறிவியல் பாதைக்குப் புத்தொளியானதையும் உலகம் கண்டு வியந்தது. அத்தகைய ஒருமாற்றம் இந்நாட்டில் ஏற்படத்தான் வேண்டும். அன்றுதான் போலியரின் முகமூடிகளையும், அரசியல் நாடகமாடுகின்ற கயவர்களின் நடிப்பையும் வெளிக்குக் கொணர்ந்து அம்பலப் படுத்த வியலும். அந்நிலைவரின் அரசியல் நாடகமாடிகளைக் கழுவேற்றவும் மக்கள் கழிவிரக்கங் கொள்ளார்.

இற்றையச் சூழலில் நாட்டு மக்களிடையே விழிப்புணர்ச்சியும் உரிமை உணர்வும் உண்மைச் சான்றோர் ஒருசிலரால் ஏற்பட்டு வருவதும் உண்மையே. ஆயினும் நாடகப் போலி வாழ்வுடையார் வலையில் சிக்குண்டு தொல்லையுறுவார் ஒருபால், வல் சிறைக்கும் வல்லாண்மைக்கும் அஞ்சி ஒடுங்கி அடிமைப்பட்டுக் கிடப்பார் ஒருபால், மூவேளையும் சோறு கிடைத்தால் போதுமென்று ஊண் நசையால் நயப்புற்று நலிவுறுவார் ஒருபால், போலிமை எது, உண்மை நிலை எதுவென்று அறியாது மயங்குவார் ஒருபால், இத்தகைய மக்கள்பால் ஊன்றி உரம் பெற்று உறைந்து கிடக்கும் தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு என்ற தன்னலப் பற்றுகளும், தான் தோன்றித் தனங்களும் நாட்டைக் கீழான நிலைக்குக் கொணர்ந்து அழிக்குந் திறனுடையவே. இவையினும் ஒரு நாட்டைக் கீழான நிலைக்கு வறுமை கொணர்ந்துவிடாது. மாறாக, தெளிவு பெற்ற குமுகாயத்தின் சீர்பெற்ற உழைப்புக்கு முன் வறுமை நிலைத்து நிற்கக்கூடியது மன்று. எனவே நம் குமுகாயத்தைப் புழுப்போல் அரித்து வரும் தீய எண்ணங்களும், தீச்செயல்களும் மடியவேண்டுமானால் ஒருவேளை உணவுக்கும், ஒருவாய்ச் சோற்




அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ? — முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

## கனவுகள் (- பாடல்கள்)

எழுதியவர் : இரா. அரங்கநாதன்.
விண்ணகம். நயினார் மண்டபம் புதுச்சேரி-4

விலை : உருபா 1-50.

**பொ**துவியல் மாந்தன் ஒருவன் இயற்கையை அணுகும் முறையும், நுண்ணுணர்வுப் புலவன் ஒருவன் அணுகும் முறையும் வேறு வேறு. முன்னவன் இயற்கையைப் புறக்கண் கொண்டே நோக்கு

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

றுக்கும் வழியில்லாமலும், வகையில்லாமலும் தமிழ மக்கள் ஒவ்வொருவரும் திண்டாடவே வேண்டும். ஒரு பிடிச் சோற்றுக்கு வழியிருக்கும் வரை தமிழனின் 'மந்த' மூளையில் புரட்சி எண்ணங்களுக்கு இடமில்லை. அவனுடைய 'துருத்தி' உடலிலே 'உரிமைக் குருதியும்' ஓடாது. ஊண் சுவையில் தழும்பேறிக் கிடக்கும் அவன்றன் நாவிலே உணர்வுச் சொற்களும் எழப் போவதில்லை. உருசிய மக்களையும், பிரஞ்சு மக்களையும் கனன்றெழச் செய்த அந்த 'முழுப் பட்டினி, நிலை வரும் வரை அரசியல் தலைவர்களின் அடிகளைத் தாங்கியும் வடநாட்டு ஆளுநர்களின் வால்களைப் பற்றியும் திரியும் இழிந்த வாழ்க்கையைத் தமிழன் கைகழுவ ஒருப்படான். ஆகவே ஒரு குமுகாயத்தை, ஓரினத்தை, ஒரு நாட்டை, ஒரு மொழியை அழித்து வரும் தீமைகளை ஒழிக்க உணர்வுத்தீ எரியட்டும்! அதன் அடிப்படையான வறுமைத் தீ வளரட்டும்!

கின்றான். தான் அதனின்றடையும் பருப்பொருட் பயனுக்காகவே அவன் இயற்கையில் ஈடுபடுகின்றான். அழகிய நறுமலர்களைக் காண்கையில் அவற்றை மாலையாகக் கட்டி விற்கலாம் என்ற நினைவு அவனுக்கு வருகின்றது. கனிந்து தொங்கும் இனிய பழங்கள் அவன் நாச்சுவையைக் கிளறுகின்றன. குளிர்ந்த மரநிழல் அவனுக்கு உறக்கத்தை வருவிக்கின்றது. ஓரளவு அழகை அவன் சுவைப்பானேயாயினும் அதுவும் அவன் புலனளவே நின்றுவிடுகின்றது. புலன்களின் வழி உள்ளத்துட் சென்று அதனை வியப்பிலாழ்த்துவதோ, விரியச் செய்வதோ இல்லை. ஆனால், நுண்ணுணர்வு வாய்ந்த புலவனோ இயற்கையில் தன்னை மறந்து உள்ளம் ஒன்றி விடுகின்றான். இயற்கை அவன் உள்ளத்தே ஆயிரம் கற்பனைகளைப் பொழிய வைக்கின்றது.; பல்லாயிரம் உவமைகளைக் கொணர்ந்து நிறுத்துகின்றது. இப்படைவிப் படைப்பின் பெருவியப்பை ஒவ்வொரு நொடியும் அவன் உள்ளத்தே எழுப்பாநிற்கின்றது. இயற்கைக்கும் பெண்மைக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. பொதுவியல் மாந்தனுக்கு, இயற்கையைப் போலவே பெண்ணும் பருப்பொருளே! அவனுக்குப் பெண் காம நுகர்ச்சிப் பொருளாகவே காட்சியளிக்கின்றாள். அவளின் முக அழகும், உடல் வாளிப்பும், உறுப்பு நலன்களும், அவனுக்குப் போதும். அவளின் உள்ள அழகை, அகவுணர்வைத் தன் உள்ளுணர்வால் காணவும், தொடவும், அவ்வுணர்வுறவு வழி இன்பம் காணவும் அவனால் இயலாது. புலவனோ, பெண்ணின் புற அழகோடு அக அழகையும் காண்கின்றான். அவன் காதலிக்கும் ஒருத்தி அவனின் ஐம்புலன்கட்கு மட்டுமன்றி, அவன் எண்ணத்துக்கும் விருந்தாகின்றாள். அவன் காதல், அவலம், உடற்பசியைத் தணிப்பதோடு அடங்கி விடுவதன்று. உண்மையில் அஃது அதன்பிறகே தொடங்குகின்றது என்னலாம். புணர்ச்சி வாயிலாய் ஒரு பெண்ணின் உள்ளத்தின் உட்கோயிலுள் நுழைந்த ஓர் உணர்வாளன் வாழ்க்கைக் கமுக்கங்களையெல்லாம் அங்குக் காண்கின்றான். பெண்ணுடலின் மென்மையும் நெளிவும் குழைவும் போன்றே பெண்ணுள்ளத்தின் மென்மையும் குழைவும், தாய்மையும் அவனுக்குத் திறக்கப் படுகின்றன. அவற்றின் தொடர்பிலேயே அவன் காதல் இன்பம் நிறைவெய்தி அவனை ஒவ்வொரு நொடியிலும் புதுமையில் அமிழச் செய்கின்றது. இவ்வாறு நுண்ணிய உணர்வுகளாற் பெறும் மனவின்பத்தையே காதலாகப் பாடுகின்றான் புலவன். அப்பாடல்களைப் படிப்போர் அவன் பெற்ற அந்நுண் ... மனவின்பத்தினைத் தாங்களும் பெற்று மகிழ்கின்றனர். இவ்

வாறில்லாமல், பொதுவியல் மாந்தனைப் போன்றே புலமைத் துறையில் ஈடுபடும் ஒருவனும், காதலின் அகவுணர்வுகளில் ஈடுபடாமல், உடலையும், உறுப்புகளின் எடுத்தல் படுத்தல்களையுமே கண்டு, மெய் யுறு புணர்ச்சியினையே காதலாக நம்பி, உடல் தினவையே காதல் வேட்டையாகக் கருதி அத்தகைய உணர்ச்சிகளையே பாடலிலும் வடிப் பானயின் அவனைப் புலவன் என்று எங்ஙனம் கூறுவது? யாப்பி னைப் பிழையின்றியும் விறுவிறுப்பாகவும் கையாளும் திறன் மட்டுமே புலவனுக்குச் சான்றாகிவிடாது. பிறர் உணராத நுண்ணிய உணர்வு களைத் தான் உணர்ந்து உலகுக் குரைப்பவனே புலவன் ஆவான்.

திரு. அரங்கநாதனின் ஐம்பது காதற்பாடல்களும் அவர்தம் ''கனவுகள்'' உடலின்பத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை என்பதையே காட்டுகின்றன. நுண்ணிய உணர்வுகளைக்காட்டியிராமை ஒருபுறமிருக்க, பெண்ணை நுகர்ச்சிப்பொருளாகவே கருதுவதும், காதல் வாழ்க்கை என்பது உடல் வேட்கையைத் தணித்துக் கொள்ளக் கிடைந்த வாய்ப்பே என்பது போல் எண்ணுவதும் பெருங் குறையே யாகும்

''உண்ணென் றளிக்கும் உதட்டுச் சுவை'' ''மேலாடை அணைத் தும் மீறித் தனி வனப்பைக் காட்டுகின்ற உடலின் கட்டு'' ''தடை யில்லாத இன்பப் போதை தருதற்கேற்ற கள்'', ''முற்றா நுங்கைக் கடித்துத் தின்கை'', ''பெண்கள் பலர் தெருவில் வரக்காணின், அவர் பால் கொள்ளைப் பருவ எழில்நிறை காணின் ''அமிழ்தே உன்றன் நிலைகாண்பேன்'', ''தொட்டுடலைச் சேர்த்திணைத்துப் பிடித்தான் — நான் துவண்டு விழ இன்பம் அள்ளிக் குடித்தான்'', ''விளையாடிச் சுவைப்போமா பருவத்தின் தேனை'', ''படுக்கை விரிப்பாயா? இன்பம் விளைப்பாயா?...... உன்மேனி காட்டாயா? ''உடலின் தணலைப் போக்கி...... அதிக சுகம் கண்டிடுவோம்'' ''இலவங்காயின் நுனி போலும் எழில்கொண்ட மார்பை மூடி நோக்கென்று சொல்பவள் நீ!'' ''உன்மேனி என்மேனி ஒருமேனியாகும்'' ''விடிந்து கூறம்மா'', ''எதற்கு அச்சம்?'' என்ற தலைப்புப் பாடல்கள், ''இதழ்த்தேன் குடித் தேன்... தேன்கன்னம் கடித்தேன்'' – ''இதழின் மென்மைதனைக் கடிக் கும் போதவர் வாய்...'' பருவம் தந்த மதமதப்பு விளையாடும்''. ''ஒட்டி வைத்துள்ள ஆடைக்குள் இருப்பவை ஊசிப்போய் விடுமா கைபட்டால்? இவ்வாறு ஒரு பாட்டுத் தவறாமல் வரும் தொடர்கள்

எல்லாம் ஆசிரியரின் கற்பனை எத்திக்கை நோக்கிச் சென்றுள்ளது என்பதைப் படிப்பவர்க்குச் சொல்லாமலே விளக்குவன.

பாரதிதாசனும் காதலைப்பற்றி எவ்வளவோ பாடியிருக்கின்றார். காதலின் நுண்சுவைகளை எவ்வளவு அழகாகப் பாடியுள்ளார்! காதலர் ஒருவர்பால் ஒருவர் பெறும் மனவின்பங்களை அவரைப் போல் தமிழில் வேறெவரும் பாடியதில்லை எனலாம். உடலின்பத்தைப் பாடநேரும் இடங்களிலும் அவர் எவ்வளவு பண்பு கெடாமல், சுவை குன்றாமல் இலை மறை காயாகச் செய்திகளைத் தெரிவித்துச் செல்கின்றார்! அவரைப்பின் பற்ற நினைக்கும் இந்நூலாசிரியர் அவர்தம் நுண்ணோக்கையும் உணர்வு நலனையும் பற்றிக்கொள்ளாமல் வெறும் உடற்சுவைப் பாடல்களைச் சான்றோர் புறக்கணிக்குமாறும், ஒரோவழி அருவருப் பூட்டுமாறும் பாடியிருப்பது வியப்பே!

ஆசிரியரின் பாடல்கள் உப்புச்சப்பற்றனவாக இராமல் விறுவிறுப் பும் ஓரளவு கற்பனையும் உள்ளனவாய் இருப்பது உண்மையே! ஆசிரி யர் 'இன்றைய உலக முறைக்கு ஏற்ப' (?!) முகவுரையில் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்ளும் வகையில், தம் பாடல்கள் "ஏதோ ஒரு நடையில் ஏதோ ஓர் இனிமையுடன்" இருப்பதாகக் கூறுகின்றார். ஆனால் அந்த நடையினிமை மட்டும் போதாது. யாப்பினை விறு விறுப்பாகக் கையாளவும், வெளிப்படையான, எளிதில் தட்டுப்படக் கூடிய சுவைகளைப் பாடவும் தெரிந்து கொள்வதோடு ஒரு புலவனின் வேலை முடிந்துவிடுவதாகாது. அவன் நுண்ணோக்கினை வளர்த்துக் கொள்ளவும் தன் எண்ணத்தை உயர்த்திக் கொள்ளவும் வேண்டும்.

ஆசிரியர் கையாளும் வடசொற்கள் அளவிறந்தன. ஒற்றெழுத்து மிக வேண்டாவிடத்து மிகுந்துள்ள இடங்கள் பல:- வேதனைப் போக்கிட, 'போதைத் தருதற்கு', 'வேண்டுமடிப் பெண்ணே', 'வேறொருத்தித் தன்னை', 'எனக்காத் துன்பம்' என்பன ஒருசில.

"அவள் யாரோ"? "முகம் காட்ட வாருங்கள்" போன்ற ஒருசில பாடல்கள் உள்ளத்துணர்வை ஓரளவு காட்டுவனவாயிருந்தாலும், வெறும் உடலுணர்வுக் காதலுக்காகவே ஒரு நூல் முழுவதையும் பயன் படுத்தியிருப்பது வரவேற்கத் தகுந்ததன்று.

— கல்லாடன்.

# இழந்தமணி இருநூறு!

மீனவன் — தலை ஞாயிறு

1 *ஊழிக்கு முன்னே ஒளிர்ந்து பல கலைகள்
ஆழிப் பரப்பாய் அமைநங்கை. ‡ எண்ணும்
†எழுத்தும் படைத்தே இணையற்ற நூல்கள்
வழுத்தும் படிக்களித்த வாக்கணங்கு. மென்மை
எளிமை இனிமை எனுமும்மைப் பண்பால்
ஒளிபெருக்கிக் காட்டும் ஒலிநயத்தாள். போற்றும்
இயலிசை நாடகமாய் இவ்வுலகத் தொன்மை
பயிலும் இளவழகுப் பாவை. தனித்தியங்கும்
தென்மொழியாய் செம்மைத் திகழுயர்வாய் ஈறின்றி
முன்வந்த பொய்யா மொழியரசி. பூமகளின்
பன்மொழிக்கு முன்னே படைப்புக்கா லந்தொட்டே
தென்றலைப்போல் வீசிவரு செந்தமிழ்த்தாய். சூடிய
பொன்மணி மாலை. புகழ்வளைந்த முததுவடம்,
மின்பவளக் கோவை, மிகுகாழ் மணியோடு,
பச்சைப் பதக்கம், படர்நீலப் பூச்சுட்டி,
மெச்சும் அணியாய் மிளிருந் தமிழ்ச்சுவடி.
வெள்ளக் கடலால் வெகுண்டு விழுங்கினவும்,
வெள்ளையர் கொண்டு வெளிநாடு சேர்த்தனவும்.
ஆடிப் பதினெட்டில் ஆற்றில் எறிந்தனவும்,
தேடிக் கரையான்கள் தின்றே அரித்தனவும்,
பண்டு நெருப்பில் பகைவர் கொளுத்தினவும்

---

குறிப்பு:- * கி. மு. 8—ஆம் நூற்றாண்டுக்குள் இந்தியாவில் எழுத்துக்கள் தோன்றின (ஆராய்வாளர்)

‡ முதல் கடல்கோள் கி. மு. 2378—இல் உண்டானதென இலங்கை வரலாறு கூறும்.

கி. மு. 3500-க்கு முன் (மோசே) ஆயிரம் ஆண்டுகளுக் கப்பால் நோவாவின் பெரு ஊழி ஏற்பட்டதாக விவிலியம் பழைய ஏற்பாடு கூறும்.

† இறைவனே ஆதியில் எண்ணெழுத்தைப் படைத்தான். (மண்டல புருடன் நிகண்டு)

மண்டும் அடுப்பில் மடையர் எரித்தனவும்
நண்ணி உரைநூலுள் நான்கண்ட வாறிங்கே
எண்ணி இழந்த நூல் எத்தனையென் றேபகர்வேன்.
தொன்மை வரலாற்றைச் சுட்டிக் கிளர்நூல்கள்
பன்மைய! அந்தோ! பதுங்கினவே! உள்ளவற்றுள்
முத்தநூல் ஏசுவுக்கு மூவிருநூற் றுக்கு முனம்!
காத்திழந்த கண்ணுய்க் கழிந்தவற்றின் எண்ணிக்கை
மெல்ல இருநூற்றின் மேலாகும். சொல்லுகின்றேன
ஒல்லும் வகையான் உணர்ந்து!.

2 ஆசிரிய மாலை; அவி நந்த மாலை;
தேசிக மாலை; சினேந்திர மாலை;
இன்னிசை மாலை; கிளவி மாலை,
பன்மணி மாலை; பல்சந்த மாலை;
வியாழ மாலை; வாருணப் பாட்டியல்
உயர்தத் தாத்தி ரேயப் பாட்டியல்;
அகத்தியர் பாட்டியல்; பாட்டியல் மரபு;
தகு காரைக்காற் பேயர் படலம்;
பதினுறு படலம்; பன்னிரு படலம்;
விதிசெய் ஆரிய படலமும்;
பதினே ழாகும் பதுங்கிய நூலே.

3 நக்கீரர் அடிநூலும்; நம்பிகளி யார்நூல்;
நவில்குண நூல்; மதிவாணர் நாடகநூல்; யாழ்நூல்;
சொக்குகனு; ஓவியநூல்; நாடகநூல்; எண்ணூல்;
சூழ்களவு; மயேச்சுரரின் இலக்கணநூல்; மடைநூல்;
தக்ககவி ராசனின் நூல், அளவை நூல்; அடிநூல்;
தனிஇரத்னப் பரீட்சைநூல், குலோத்துங்கன் இசை நூல்;
மற்கலிநூல்; கூத்தெனுநூல்; † பொய்கையார் நூலே;
மந்திரநூல்; நூல் மறைந்த இருபத்தி ரண்டே.

† கழகக்காலப் பொய்கையாரின் நூல்.

4 அசதிக்கோ வை; அரையர் கோவை; புகழ்சால்
இசைத்தமிழ்ச் செய்யுட் டுறைக்கோவை; சீர்தமிழ
முத்தரையர் கோவை; மொழிகாரிக் கோவை; சொல்
நத்துநந்திக் கோவை; நவில்வங்கர் கோவை;
குமாரசே னுசிரியர் கோவை; கலந்தே
கமழ்மும்ம ணிக்கோவை; கற்ருர் மனங்கவரும்
நாலா யிரக்கோவை; நல்பத்தும் நாமிழந்த
கோலத் தமிழ்க்கோவை கூறு.

5 பெரும்பொருள் விளக்கம்; பெரிய முப்பழம்;
பெருங்குரு குடனே; பெரிய பம்மம்;
பெருவல் லத்தொடு; பெருநா ரையும்;
பெருவள நல்லூர்ப் பாசண் டத்தொடு;
பேரிசை; சிற்றிசை; சிற்றட் டகமும்;
சீரிய குறுவேட் டுவச்செய் யுளொடு;
சிறுகாக் கைப்பா டினியம்; சுவையார்
சிறுகுரீஇ யுரையொடு; மாய்ந்த
குறியன பெரியன குறிபதின் மூன்றே.

6 திருப்பாட்டு; நத்தத்தர் யாப்பும்; வண்ணம்
சேர்ந்தொளிர்ந்த யாப்பியலும்; தும்பிப் பாட்டும்;
பெருகுசங்க யாப்புடனே; வஞ்சிப் பாட்டும்
பேசுகைய னுர்யாப்பும்; பாவைப் பாட்டும்;
ஒருமோதி ரப்பாட்டும்; மயேச்சர் யாப்பும்;
உயர்கையனுர் யாப்பியலும்; † வகைமை செய்யுள்;
மருமுள்ளி யார்புணைந்த கவித்தொ கையும்;
மாய்ந்தவையே பதின்மூன்று பாக்கள் தாமே.

7 கோயிலந் தாதி; திருமறைக்காட் டந்தாதி;
வாய்ந்ததில்லை யந்தாதி; வல்லையந் தாதி;
புகழ்நறையூர் அந்தாதி; * பொய்கையந் தாதி;
அகத்தியம்; நல்காக்கைப் பாடினியம்; போக்கியம்;

† செய்யுள் வகைமை... என்பது இசை குறித்து வகைமை செய்யுள் என மாறிவந்துள்ளது

* பொய்கையந்தாதி:- பொய்கையாழ்வாரின் திருவந்தாதியினும் இது வேறுபட்ட நூல் என்பர்.

செஞ்சொல் மலிந்த செயிற்றியம்; வாய்ப்பியமே;
விஞ்சுபஞ்ச பாரதியம்; விள்ளுபசந் தம்;சயந்தம்
தந்திர வாக்கியம்; தக்கபல் காப்பியமே;
இந்திர காளியமே; கண்டனலங் காரம்;
பரதசே னுபதியம்; பாடலம்; சிந்தம்;
கிரணியம்; பாசண்டம்; புட்கரனூர் மந்திரமே;
பல்குபனம் பாரம்; பரம்; வருத்த மானமுடன்;
பல்காயம்; மாடலம்; பைரவமே; தேனூர்
இளந்திரை யத்துடனே; எண்முப்பத் தொன்றும்
உளங்கவலச் செத்தவைதாம் ஓர்க.

8 கலியாண கதையும்; களரியா விரையும்;
எலிவிருத் தத்துடன்; இரும்பல் காஞ் சி
கடிய நன்னியார் கைக்கிளைச் சூத்திரம்;
கடகண் டுடனே, கவிமயக் கரையும்;
உலகா யதமும்; ஊசி முறியும்;
கலைக்கோட் டுத்தண்டு; கால கேசி;
அவிநயப் புறநடை; அஞ்சன கேசி;
அவிநயம்; அறிவுடை நம்பி சிந்தம்;
இசைநுணுக் கத்துடன்; அவிநய உரையும்;
வசைக்கடம்; பரதம்; குண்டல கேசி;
அமிர்த பதியுடன்; அரச சத்தம்
இமிழ்மணி யாரம்; பிங்கலகேசி
† சினேந்திர வெண்பா; கச்சபுட வெண்பா;
இனியகாங் கேயன் பிள்ளைக் கவியும்;
சொல்பல் காப்பியப் புறநடை;
செல்நூல் இருபத் தெட்டெனத் தேர்கவே.

9 பழகுதமிழ் நக்கீரர் நாலடிநா னூறு;
பகர்முப்பெட் டுச் செய்யுள்; மூவடிமுப் பஃதே;
மழவையெழு பஃதுடனே; நாலடிநாற் பஃதே
மாண்புகுண நாற்பதுடன்; கொப்பத்துப் பரணி;

---

† சினேந்திர வெண்பா கச்சபுட வெண்பா, மறைந்தவற்றுள்ளும் அடங்குமென்பார். ஆய்வுக்குரியன.

எழிலுயர்ந்த ‡ தென்தமிழ்தெய் வப்பரணி; கீர்த்தி
இமிழ்கூடல் சங்கமத்துப் பரணியொடு செந்தேன்
பிழிகனியார் வச்சத்தொள் ளாயிரத்தி னேடு
பிழையற்ற ஒருபத்தும் நாமிழந்தே விட்டோம்.

10 செங்கோன் தரைச்செலவே; தேன்தகடூர் யாத்திரையே;
பொங்குமார்க் கண்டேய ஞர்காஞ்சி; சாந்திப்
புராணம்; புணர்பாவை; பூத புராணம்;
விரிபுராண சாகரமே; மாபுரா ணம்; குருகு;
தக்காணி யத்துடனே; வத்சரா சன் விரதம்;
மிக்கதிரை யக்காணம்; தாள சமுத்திரமே;
விம்பசா ரக்கதையே; சித்தரா ரூடமே;
வம்பவது விச்சை; வளையா பதியுடனே;
கன்னிவ னப்புராணம்; காணின் பதினெட்டாம்
சென்றெழிந்த சொத்துக்கள் சேர்ந்து.

11 நாரத சரிதை; திருவுலாப் புறமும்;
சீரார் செயல்முறை ; சாதவா கனமும்;
நல்லாறன் மொழிவரி, பாரதம் ஐந்தே; ¶
சொல்வயிர மேக விருத்தி; முறுவல்;

---

‡ தென்தமிழ்த் தெய்வப் பரணியை கலிங்கத்துப் பரணி என்று கூறுவார் உளராயினும் இதனைப் பலர் மறுத்துக் கூறுவாருமுளர். ஒட்டக்கூத்தரால் போற்றப் பெற்றது செயங்கொண்டார் பரணியன்றென்றவர் கூறுவார். மற்றும் விக்கிரம சோழனின் தென்கலிங்க வெற்றியைக்கூறும் கலிங்கத்துப் பரணி என்ற நூலும் அழிந்ததென்று சதா சிவப் பண்டாரத்தார் கூறுவார்.

¶ பாரதம் ஐந்து. 1. மகாபாரதம் (சின்னமனூர்ச் சாசனம்)
2. பாரதம் (திவாகர உரை)
3. பெருந்தேவனர் பாரதம்
4. பாரத வெண்பா (யாப்பருங்கலமேற்கோள்)
பஃறொடை
5. அருணிலைவிசாகன் பாரதம்.

அமைவுற நான்கே பழையரா மாயணம்; †
சமணரா மாயணம்; கணக்கியல்; பொருளியல்
ஆசிரிய முரியே; அணியியல்; அகத்திணை
மாசிரி செய்யுளியல்; பஞ்ச மரபே;
உதிதோ தயகா வியமொடு; கற்ருேர்
மதித்திடு பூதத் தாரவை யடக்கும்;
விதிபட் டழிந்த விருபத்தாறே.

12 சித்தாந்தத் தொகையுடனே விளகத்தார் கூத்து ;
சேர்வசைக்கூத் தோடு; மய மதம்; யோக சூத்ரம்;
நத்துபருப் பதமுடனே; நல்கிளவித் தெளிவு;
நனிகிளவி விளக்கமொடு; கிளிவிருத்தம்; சொற்கள்
தத்திவரு வெண்டாளி; ஆனந்த வோத்து;
தாளவகை யோத்து; நரி விருத்தம்; பதின் மூன்றே
இத்தகைய மிக்க; விடு பட்டனவும் சிலவே.
இருநூற்ருென் ருங்கணக்கு பட்டதமிழ் மணியே!!

---

† இராமாயணம் நான்கு:-

1. இராமசரிதம் (யாப்பருங்கலமேற்கோள்)
2. இராம சரிதம் (ஆசிரியமாலை. நச்சர்மேற்கோள்)
3. இராம சரிதம் (திவாகரம் உரையுள்)
4. இராமாயண வெண்பா (வீரசோழிய உரையுள்)

---

## பிழைதிருத்தம்

தென்மொழி சுவடி 4, ஓலை 7–இல் உள்ள பிழைகளை அடியிற் காணும் வண்ணம் திருத்திப் படித்துக்கொள்ள வேண்டுகின்ருேம்.

| பக்கம் | பத்தி | பிழைகள் | திருத்தம் |
|---|---|---|---|
| 34 | தலைப்பில் | Palacontology | Palaentology |
| 35 | மூன்ரும் பத்தி | Chemical Regions | Chemical Reactions |
| 36 | இரண்டாம் பத்தி | Cabonic Acid | Carbonic Acid |
| 37 | கடைசி பத்தி | Palecogeography | Palaeogeography |

– அமைச்சர்

# வியத்தகு மணிப்பொறி

வை. கழராம்பன், அண்ணுமலைநகர்.

புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட பல அறிவியல் உண்மைகளை நாம் அன்றாட வாழ்க்கையில் பயன் படுத்துகின்றோம். அவ்வுண்மைகளால் நம் அறிவையும் மேலும் தெளிவாக்கிக் கொள்ளுகின்றோம். அணுவைப் பற்றிய ஆராய்ச்சி இன்று எல்லா நாட்டிலும் நடந்து வருகின்றது வேதியல் (Chemistry), விளங்கியல் (Physics) ஆராய்ச்சிகள் இன்று மிகவும் பயனுடையனவாக இருக்கின்றன. இயற்கையில் உள்ள தனிமங்கள் (elements) 92 என்றும் அவற்றில் கதிரியக்கமுள்ள (Radio active) தனிமங்கள் சில இருக்கின்றன என்றும் எல்லாரும் அறிவர். கோளியம் (uranium), கதிரியம் (Radium) போன்ற தனிமங்கள் கதிரியக்கத் தனிமங்களே. கதிரியக்கத் தனிமங்களின் ஆராய்ச்சியால், பல தொல் பொருள்களின் காலத்தைத் துல்லியமாகக் கணக்கிடும் வியத்தகு மணிப்பொறியைக் கண்டு பிடித்தனர்.

கதிரியக்கத் தனிமங்கள் கதிர்களைத் தொடர்ந்து வெளியேற்றிக் கொண்டிருப்பதால், அவை அழிந்துகொண்டே இருக்கின்றன. அவற்றின் ஆற்றல் கதிர் வீச்சாக (Radiation) வெளியேறுகின்றது. இத்தகைய தன்னழிவு (self-decay) எந்த நிலையிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் மாறுமல் ஒரே சீராக நடைபெறுகின்றது. ஒவ்வொரு கதிரியக்கத் தனிமத்திற்கும் ஒவ்வோர் "அரை-வாழ்க்கை" (half-life) உண்டு. அரை-வாழ்க்கை என்றால் நாம் எடுத்துக் கொண்ட அத்தனிமத்தின் அரைப் பகுதி அளவு அழிவதற்கான காலம் என்று பொருள். நாம் எவ்வளவு அத்தனிமத்தை எடுத்துக்கொள்ளுகின்றோமோ அவ்வளவில் அரைப்பகுதி அழியுங்காலமே அரை-வாழ்க்கையாகும். எடுத்துக் காட்டாக, ஓர் ஆயிரம் சீரெடை (one kilo-gramme) அளவு கோளியம் (Uranium) எடுத்துக் கொண்டால், அதில் அரைப்பகுதி 500 சீரெடை (500 grammes) அழிய 450 கோடி ஆண்டுகள் ஆகின்றன. மீந்ததில் அரைப் பகுதி (250 சீரெடை) அழிய மீண்டும் 450 கோடி ஆண்டுகள் ஆகின்றன. இவ்வாறே இவ்வினை தொடர்கின்றது. அந்த அரைப்பகுதி அளவுள்ள பொருள் அழியுங்காலமே அரை வாழ்க்கை (half life) எனப்படும். வெவ்வேறு வகைக் கதிரியக்கத் தனிமங்கள் வெவ்வேறு வகையான அரை-வாழ்க்கைகளைப் பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக கோலியத்தின் அரை-வாழ்க்கை 450 கோடி ஆண்டுகள்; கதிரியத்தின் (Radium) அரை-வாழ்க்கை 1,590 ஆண்டுகள்; கரியகத்தின் (carbon) அரை வாழ்க்கை ஏறத்தாழ 5,700 ஆண்டுகள்.

அறிவியலறிஞர்கள் கதிரியக்கத் தனிமங்களின் அழிவு பற்றி ஆய்ந்து, அந்தக்காலத்தை (அரை-வாழ்க்கையை) மாற்ற முடியுமா

என்று ஆய்ந்தனர். கதிரியக்கத் தனிமங்களைச் சூடேற்றினர்; அமுக்கத்திற்கும் மின்னத்திற்கும் (Electricity) உட்படுத்தினர். என்ன செய்தாலும் அவற்றின் அரை வாழ்க்கைக் காலத்தை மாற்ற முடிய வில்லை. இவ்வுண்மையை அடிப்படையாக வைத்துக்கொண்டு மிகப் பழங்காலத்தே நிகழ்ந்த நிகழ்வுகளையும், பொருள்களையும் அவற்றின் காலத்தையும் துல்லியமாகக் கணிக்க முடியும் என முடிவு செய்தனர்.

கதிரியக்கக் கரியகம் (Radioactive carbon) இயற்கையில் உள்ள ஒரு கதிரியக்கத் தனிமமாகும். காற்றில் கலந்துள்ள இக் கதிர்க்கரியின் அளவு என்றும் நிலையானது (constant); மாறாதது. எத்தனைக் கதிர்க்கரியணுக்கள் அழிகின்றனவோ, அத்தனைக் கதிர்க் கரியணுக்கள் தோன்றிக்கொண்டே இருப்பதால், அத்தனிமம் இயற் கையில் – காற்றில் – மாறாத அளவாய் இருக்கின்றது. இக்கதிர்க் கரியணுக்கள், தீயகங்களுடன் (oxygen) சேர்ந்து கரியிருதீயதை (carbon dioxide) யாக மாறி நிலைத்திணைகளுக்கு உணவாகின்றன. கரியிருதீயதை என்னும் காற்றை உணவாகக்கொண்டு, அந்நிலைத் திணைகள் உயிரணுக்களைப் பெருக்கிக் கொள்ளுகின்றன. அவற்றுடன் கதிர்க்கரியணுக்கள் தங்கி நிலைத்திணைகளிலிருந்து இயங்கு திணையான விலங்குகளின் உடம்புகட்கும் பரவுகின்றன. எனவே, எல்லா உயிர்களின் உடம்பிலும் கதிர்க்கரியணுக்கள் உள்ளன. இங்கே நாம் கவனிக்க வேண்டிய உண்மை ஒன்றுள்ளது. ஒவ்வொரு வாழ்கின்ற உயிரியின் (living organism) உடம்பிலும் ஒரு குறிப் பிட்ட (definite) நிலைத்த (constant) அளவுள்ள கதிர்க் கரியணுக் களே இருக்கின்றன. அவ்வுயிரி வாழும்போது, அதன் உடலில் இருக் கின்ற கதிர்க்கரியணுக்களில் சில அழிய, அதே அளவுள்ள கதிர்க்கரி யணுக்கள் அங்கு வந்து சேர்வதால் அதன் உடலில் குறிப்பிட்ட நிலையான கதிர்க்கரியணுக்கள் உள்ளன. எடுத்துக் காட்டாக, ஒரு குறிப்பிட்ட மரத்தின் ஒவ்வொரு சீரெடைப் (1 gramme) பகுதியிலும் 5000 கோடி கரியணுக்கள் இருக்கின்றன.

அந்த விலங்கோ நிலைத்திணையோ இறந்தவுடன், அதன் உட லுக்குக் கிடைக்க வேண்டியகதிர்க் கரியணுக்கள் நின்று போவதால், குறிப்பிட்ட அளவு இருந்த நிலைத்த கதிர்க்கரியணுக்கள் அழியத் தொடங்குகின்றன. அப்போதுதான் நம் வியத்தகு மணிப்பொறி – கரியணு மணிப்பொறி – இயங்கத் தொடங்குகின்றது. அக்கதிர்க் கரியணுக்கள் முறையாக (அரை-வாழ்க்கை விதிப்படி) அழியத் தொடங்குகின்றன. முன்னர் குறிப்பிட்டுள்ளபடி கதிர்க்கரி யணுவின் அரை வாழ்க்கைக் காலம் 5700 ஆண்டுகளாகும். எனவே, அதன் உடலிலுள்ள அரைப் பகுதிக் கதிர்க்கரியணுக்கள் அழிய 5700 ஆண்டுகளும், காற்பகுதியழிய 11,400 ஆண்டுகளும், அரைக்காற் பகுதி ($\frac{1}{8}$) அழிய 17,100 ஆண்டுகளும் இவ்வாறே முறையாக மேன் மேலும் ஆண்டுகள் கழிகின்றன. இத்தகைய தன்மையால், ஒரு

விலங்கின் அல்லது நிலைத்திணையின் கடந்த காலத்தைத் துல்லிய மாகக் கணக்கிட முடிகின்றது அவ்வுயிரியில் அடங்கியுள்ள கதிர்த கரியணுக்களின் அளவை வைத்து எளிதாக அதன் காலத்தைக் கணிக்க முடிகின்றது

இக் 'கரிமணிப்பொறி' (Carbon Clock) தொல்பொருள் ஆராய்ச்சி யாளருக்கும், வரலாற்றுளருக்கும் மிகவும் பயனுடையதாய் விளங்கு கிறது. உலகத்தின் பல கண்காட்சிகள் (Museums) பல பழைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பொருள்களை வைத்துள்ளன. அவற்றின் காலத்தை வரலாற்றுசிரியர்கள் துல்லியமாகக் கணக்கிட முடியாமல் அல்லற்பட்டு சற்றேறக் குறையக் கணக்கிட்டிருந்தனர். இன்றோ அவற்றின் பழங்காலத்தை இவ்வாராய்ச்சியின் விளைவாகத் துல்லிய மாகக் கணக்கிட முடிகின்றது!

எகிப்து நாட்டின் பழங்காலச் சுடுகாட்டில் கண்டெடுக்கப் பட்ட ஒரு படகுத்துண்டின் காலத்தைத் தொல்பொருள் துறையினர் 3,750 ஆண்டுக் காலத்தது என்று குறித்தனர். அறிவியலாளர் அம்மரத் துண்டை ஆராய்ந்தனர். அப்பழைய மரத்தில் ஒரு சீரெடைக்கு எத்தனைக் கதிர்க்கரியணுக்கள் இருக்கின்றன என்று கணக்கிட்டனர். அதே இனத்தை-வகையைச் சார்ந்த உயிர்வாழும் புதிய மரமொன்றை வெட்டி, அதில் ஒரு சீரெடைக்கு எத்தனைக் கதிர்க்கரியணுக்கள் உள்ளன என்றும் கணக்கிட்டனர். பிறகு அப்பழைய மரத்துண்டின் காலம் 3, 620 ஆண்டுகளாகும் என்று தெரியவந்தது. உருசி யாவிலே தாய்மூர் பகுதியில் நெடுங்காலமாகப் பனியில் கிடந்த யானை யின் காலம் என்னவென்று இம்முறையைப் பயன்படுத்தி ஆய்ந்தனர். அதன்காலம் 12,000 ஆண்டுகள் என்று அறிந்து வெளியிட்டனர். பிரான்சிலே ஒரு குகையில் பழைய மாந்தன் எரித்த கரித்துண்டங் களையும், சிலஅடையாளப் பொருள்களையும் கண்டுபிடித்து அவற்றை இவ்வாறுக ஆய்ந்தனர். அப்பழைய மாந்தன் வாழ்ந்த காலம் 15,500 ஆண்டுகளுக்கு முந்தியது என்று தெரியவந்தது.

இக் கரிமணிப்பொறியின் பயன் மண்ணியலார்க்கும் (Geologists) பெரிதும் தேவைப்படுகின்றது கல்நெய் (petroleum) எங்கெங்கு மண்ணுக்கடியில் இருக்கின்றதோ அங்கிருந்து ஒருவகைக் காற்று (Methane gas) வெளிப்படும். அவ்வகைக் காற்று வெளிப்படும் இடங்களிலெல்லாம் கல்நெய் இருக்கும் என்று மண்ணியலாளர் எதிர் பார்க்கின்றனர். ஆனல், மரங்கள் மண்ணுக்கடியில் மட்கிக் கிடக்குமானுலுங் கூட, அதன் அழிகின்ற தன்மையால், அவ்வகைக் காற்று (Methane gas) மரத்திலிருந்து வெளிப்படும். எனவே மண்ணியலாளர் கல்நெய் கிடைக்குமிடத்தை உறுதியாக அறிந்து கொள்ளாமல் தவித்தனர். அவர்க்கு உதவிசெய்கின்றது இம்மணிப் பொறி! அக்காற்று வெளிவரும் இடத்தில் மணிப்பொறியை வைத்

தால், அஃது அக்காற்றின் காலத்தைக் குறிப்பிடுகின்றது. மரங்களி லிருந்து வெளிவரும் காற்று குறுகிய கால எல்லையினதாக மிகுந்த எண்ணிக்கை கொண்ட கதிர்க்கரியணுக்களைக் காட்டும். கல்நெய் யிலிருந்து புறப்பட்டுவரும் அக்காற்று இதனினும் வேறுபட்ட தன் மையுடையதாகக் காட்டும். இத்தகைய அரிய பயன்களை இம்மணிப் பொறியால் நாம் பெறுகின்றோம்

பழங்காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை இம் மணிப்பொறி காட்டுமா என்ற வினாவிற்கு, காட்டாது என்றே விடைசொல்ல வேண் டியுள்ளது. கரிமணிப்பொறியால் இவ்வேலை செய்ய முடியாது; ஆனால் கோளியம் (Uranium) எனும் தனிமத்தைப் பயன்படுத்தி அந்நிகழ்ச்சி களையும் கணக்கிடலாம் என்று அறிவியலாளர் கண்டுபிடித் துள்ளனர். கோடிக்கணக்கான ஆண்டுகட்கு முன் நிகழ்ந்த நிகழ் வையும் காலத்தையும் இக்கோளிய மணிப்பொறி (Uranium clock) காட்டும். ஏனென்றால், கதிரியக்கக் கோளியத்தின் அரை வாழ்க்கை 450 கோடி ஆண்டுகளாகும். ஒவ்வொரு பத்திலக்கம் ஆண்டுகட்கு ஒருமுறை ஒரு சீரெடை கோளியத்திலிருந்து 1/10000 சீரெடை ஈயம் (Lead) தோன்றுகிறது. 8 கோடி ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆயிரஞ் சீரெடை, (I kilo gramme of Urauium) கோளியத்திலிருந்து ஒரு சீரெடை ஈயம் கிடைக்கின்றது.

இக்கோளிய மணிப்பொறியால், நம் உலக மேல்தோட்டின் (earth's crust) காலம் 300 கோடி ஆண்டுகள் என்று கணக்கிட் டிருக்கின்றனர்; நில உலகின் காலம் 400 கோடி முதல் 500 கோடி ஆண்டுகள் வரை என்று கூறுகின்றனர். பனிமலை (இமயம்) யின் காலம் 20 கோடி ஆண்டுகளாகும்.

இத்தகைய இன்னும் வியப்பூட்டக் கூடிய ஆராய்ச்சிகளை அறிஞர்கள் செய்து கொண்டே இருக்கின்றனர்.

---

## நூலகங்களுக்குத் தென்மொழி !

பொது நூலகங்களுக்குத் தென்மொழி வராத ஊர்களில் உள்ள தமிழன்பர்கள், தென்மொழியைத் தாங்கள் விரும்பிப் படிப்பதாகவும், எனவே ஆங்காங்குள்ள நூலகங்களில் தென்மொழியை வாங்கிப் பொதுமக்கள் படிக்கக் கொடுக்க வேண்டுமென்றும் நூற்றுக் கணக் காகக் கையொப்பங்கள் வாங்கி, அவ்வவ்வூர் மாவட்ட நூலகக் குழு ஆணையாளர்க்கு விண்ணப்பிக்க வேண்டிக்கொள்ளுகிறேன். விண்ணப்பத்தின் ஒரு படியைத் தென்மொழிக்கும் விடுக்கவும். (ஆ.ர்-)

முன் இதழ்த் தொடர்ச்சி.

# பேதைமையுள் பேதைமை

— தமிழவேள்.

இராமலிங்க வள்ளலார் ஒரு நூற்றுண்டுக்கு முன் தமிழகத்தில் வடமொழியின் வல்லாண்மை சற்று மிக்கிருந்த நேரத்தில் வாழ்ந்தவர். அவருடைய பாடல்களிலும் கட்டுரைகளிலும் வடமொழிக் கலப்பு இல்லாமல் இல்லை. அவர் தோற்றுவித்த இயக்கத்தின் பெயரே தனித்தமிழில் அமையவில்லை என்றாலும் அவர்க்கு முன்னுல் இருந்த தாயுமானவரைப்போல் வடசொற்களைப் பெருமளவில் தம் பாடல்களில் கலந்து அவர் பாடவில்லை. வள்ளலாரைப் பற்றி நூல் எழுதியிருப்பவரே குறிப்பிடுவது போல், சில நூறு பாடல்களைத் தவிர மற்றுள்ள ஆயிரமாயிரம் பாடல்களை வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலவாத தூய தமிழிலேயே அவர் இயற்றியிருக்கிருர். அவர் வடமொழி பயில்வதிலுள்ள இன்னல்களை மட்டும் சொல்லவில்லை; தமிழ் மொழியின் அருமை பெருமைகளையும் உணர்ந்து சொல்லியிருக்கிருர். ஆரிய மொழியில் தனக்குப் பற்று ஏற்படாமல் தமிழ் மொழியினிடத்தில் மட்டுமே பற்று ஏற்படச் செய்தமைக்காக அவர் இறைவனுக்கு நன்றி செலுத்துகிருர். வேதஆகம புராணங்களையும் சமயமதங்களையும் புறக்கணிக்க வேண்டும் என்கிருர். தூய மெய்நெறிக்கு அவையெல்லாம் தடையானவை என்கிருர். ஆண்டவரை நம் வாயினுல் வாயார வாழ்த்துவது தவிரப் பிறரைக்கொண்டு வேறு மொழிகளில் பொருள் விளங்காமல் அருச்சனை முதலியன செய்தல் முறைபானதன்று என்று கடிகிருர்! தென்மொழிக்கு நிகராகவோ உயர்வாகவோ அவர் வடமொழியைக் கருதவில்லை என்பதையும் மெய்யறிவு உலகின் பண்பாட்டுப் பொது மொழியாகத் தமிழையன்றி சமற்கிருதத்தை அவர் ஏற்கவில்லை என்பதையும் கீழ்க்காணும் அவரது எழுத்துகளை நடுநிலையில் நின்று படிப்பவர் யாரும் தெளிவாக அறியலாம்.

''இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போது போக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாடைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய் சாகாகக் கல்வியை இலேசில் அறிவிப்ப

தாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்!''

''ஆரியம் மகாராட்டிரம் ஆந்திரம் என்கின்ற பற்பல மொழிகளைப் போலல்லாமல் பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும் – ஒலி இலேசாயும் – கூட்டென்னும் சந்தி அதிசுலபமாயும் – எழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையாயும் – அட்சர ஆரவாரம் – சொல்லாடம்பரம் போது போக்கு, பெருமறைப்பு முதலிய பெண்மை, அலங்காரமின்றி எம்மொழியின் சந்தங்களையும் தன் மொழியுள் அடக்கி ஆளுகையால் ஆண்தன்மை பொருந்தியதுமான தமிழ்...''

''இப்போதிருக்கும் வேதாகம புராணங்களிலும் சமய மதங்களிலும் இலட்சியம் வையாதீர்கள். வைத்தால் சமரச சுத்த சன்மார்க்கத்தில் உங்களுக்கு இலட்சியம் வராது. வராவிட்டால் நீங்கள் அடையப் போகிறது ஒன்றுமில்லை''

''இதுபோல் சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் இலட்சியம் வையாதீர்கள்''

''சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கியத் தடைகளாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும் காமக் குரோதம் முதலியவை நேரிட்டகாலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் ஆவார்கள்''

சாகாத வாழ்வைப்பெற மூன்று பெரு மந்திரங்களாக வள்ளலார் சொன்னவை – ''பசித்திரு – தனித்திரு – விழித்திரு'' – என்பவை, தனித்தமிழ்ச் சொற்களாகவே உள்ளன என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். வடமொழி நூல்களில் உள்ள ''தத்துவங்கள் நீதிகள் முதலியவற்றைப் பிழிந்தெடுத்த சாறுகத்தான் வள்ளலார் உயிர் இரக்க ஒழுக்கம், அருட்பெருஞ்சோதி அகவல் முதலானவற்றைப் பாடினார்'' என்று சொல்வது பேராசிரியர் இரா. பி. சேது அவர்கள் எழுதியுள்ள சிலவரிகளைத்தான் நினைவு படுத்துவதாக உள்ளது. அவர்

எழுதுகிறார் "தமிழ் நூல் முறைகளையும் வழக்குகளையும் வட நூல் வழக்கென்று மொழிவது தமது அறிவின் நுண்மைக்கும் ஆராய்ச்சியின் வன்மைக்கும் அறிகுறியாகும் என்ற பாழாய எண்ணத்துட்பட்டுப் பலர் பலவாறு பிதற்றுகின்றார்கள். நம் தமிழ் மொழியில் வழங்குகின்ற தனி நூல்களுக்கெல்லாம் வடமொழியில் முதல் நூல் உண்டு என்று முனைந்து மொழிபவர் சிலராவர். தமிழ் மொழியின்கண் அமைந்து விளங்கும் அழகிய சொற்களெல்லாம் ஆரியத்தினின்றும் போந்து தென்மொழியில் திகழ்கின்றன என்று திறம்படக் கூறுபவர் சிலராவர். தமிழ்மொழியிலுள்ள சமய நூல்களுக்கும் சாத்திர நூல்களுக்கும் வடமொழியில் முதல்நூல் தேடி அலைபவர் சிலராவர். செந்தமிழ் மொழியில் செம்மையாய் அமைந்த நூல்களை வட நூல் வழக்கின் வழியமைந்த நூல்கள் என்றும் வட நூற்பொருளை விரித்துரைக்கும் நூல்கள் என்றும் விளக்கமாக உரைப்பர் ஒருசாரார். இவ்வாறு உரைப்பவர் கருத்தெல்லாம் தமிழ் மொழியைத் தனிமொழி என்று உணராத் தன்மையானும் தமிழ் மொழியின் சொல்வளம் பொருள்வளம் முதலிய அழகுகளை அறியாத தன்மையானும் நிகழ்வனவாதலால், அன்னார் கூறும் சொற்களை விரிவிலா அறிவினர்கள் வெற்றுரை யென்று தள்ளுதலே பொருத்தமுடைத்தாகும்" என்கிறார் பேராசிரியர் சேது அவர்கள் என்றோ எழுதிய வரிகள் இன்றும் சரியாகவே இருக்கின்றன.

சிறுகதை எழுத்தாளர் ஒருவர் சில திங்களுக்கு முன், சென்னையிலிருந்து வெளி வந்துகொண்டிருந்த ஓர் இதழில் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையில் அவர் தமிழில் இலக்கியமே இல்லையென்றும் கழக இலக்கியப் பாடல்கள் எல்லாம் வெறும் நாட்குறிப்புகள் என்றும் திருக்குறள் வெறும் அறநூல் என்றும் அவை பாடல்களாய் இருப்பதால் மதிப்புப் பெறுகின்றன என்றாலும் அவையெல்லாம் இலக்கியமாகமாட்டா என்றும் கூறி அவர் தம் கூற்றுக்கு எடுத்துக் காட்டாகப் பாலைக்கலி 35-ஆம் பாடலில் வரும்,

"நிலநாவில் திரிதருஉம் நீண்மாடக் கூடலார்
புலநாவில் பிறந்த சொல் புதிதுண்ணும் பொழுதன்றோ
பலநாடும் நெஞ்சினேம் பரிந்து நாம் விடுத்தக்கால்
சுடர் இழாய் நமக்கவர் வருதும் என்று உரைத்ததை"

என்ற வரிகளையும், புறநானூறு 112-ஆம் பாடலாக உள்ள,

"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்
எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே"

என்னும் வரிகளையும் சுட்டிக்காட்டி யிருந்தார். எந்தக் கட்டுரையில் யார் இந்தப் பாடல்களை எடுத்தாண்டிருந்தாரோ, இந்த இரு பாடல்களை மட்டும் குறித்து வைத்துக்கொண்டு அந்தச் சிறு கதை எழுத்தாளர் தாமும் ஒரு கட்டுரை எழுத விருப்பப்பட்டு எழுதிவிட்டிருக்கிறார். அவர் தொல்காப்பியத்தையோ, கழக இலக்கிய நூல்களையோ கையாலும் தொட்டுப்பார்த்திருக்கமாட்டார் என்பதை அவருடைய கட்டுரையே நன்கு புலப்படுத்துவதாக இருக்கின்றது.

அவர் அந்தப் பாலைக்கலிப் பாடல் வரிகளைக் கூறி, "இது ஒரு காதலியின் நாளேட்டில் ஒரு குறிப்பு அன்றி வேறு என்ன? யார் அந்தக் காதலி? யார் அந்தத் தோழி? யார் அந்தக் காதலன்? எங்கே போனான்? மிக அழகாக வருகிற நேரத்தைக் குறித்துச் சொல்கிறாளே அவ்வளவு தமிழ்ப் பற்று உடையவனா அவன்? ஆனால், ஏன் வரவில்லை?" என்றெல்லாம் கேட்கிறார். அகத்திணைப் பாடல்களில் யாருடைய பெயரையும் குறிக்கக் கூடாது. யாருடைய பெயரேனும் குறிக்கப்பட்டால் அது புறத்திணைப் பாடலாகவே கருதப்படும் என்னும் தமிழ் இலக்கணத்தை அவர் அறிந்திருக்க மாட்டார்.

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅ
புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே"
– தொல். 1003, 1004.

என்று தொல்காப்பியர் சொல்லியிருப்பதை அவர் படித்திருக்கமாட்டார். படித்திருந்தால் அவர் அந்தக் கேள்விகளைக் கேட்டிருப்பாரா?

"மனிதனுடைய வெற்றி வீழ்ச்சிகள் என்ன, இன்பங்கள் என்ன, துன்பங்கள் என்ன, என்பவெல்லாம் கழகப் பாடல்களில் காணக் கிடைக்காது" என்று சொல்லிவிட்டு மேற்கண்ட புறநானூற்றுப் பாடலை எடுத்துக்காட்டியிருக்கிறார். அந்தப்பாடலில் தந்தையை இழந்த

இரு பெண் மக்களின் துன்பம் உள்ளத்தைத் தொடும் வகையில் சொல்லப்பட்டில்லையா? ஒரு திங்களுக்கு முன் இருந்த பெருவாழ்வு வீழ்ச்சியுற்று விட்டதை அந்தப் பாடல் தெரிவிக்கவில்லையா? அத்தகைய பாடல்கள் எல்லாம் "தனிப்பட்டவரின் வெறும் நாட்குறிப்புகள். இல்லன, இனியன, நல்லன கூறினும் அவை இலக்கியமாகமாட்டா" என்றால், இன்று எழுதப்படுகின்ற சிறுகதைகளும் நாட்குறிப்புகள் தாமே? அவையும், நல்லன இல்லாவிடினும் இல்லன இனியன, கூறுபவை தாமே? அவை மட்டும் எவ்வாறு இலக்கியங்களாகும்? "சிறுகதை இலக்கியம்" என்று எப்படி அவற்றைக் கொள்வது?

அந்த எழுத்தாளர் இலக்கியம் என்றால் என்ன என்பதற்குத் தாமே ஒரு விளக்கமும் தருகிறார். "அவை இல்லன கூறி நம்மை ஏய்க்க வேண்டாம். இனியன கூறி மயக்க வேண்டாம். நல்லன கூறித் 'தர்மோபதேசம்' என்கின்ற 'அதிகப் பிரசங்கித்தனம்' செய்ய 'வேண்டாம்' இந்த 'வேண்டாம்' எல்லாம் நீங்கிய மிகுதியே இலக்கியம். அதாவது சுருக்கமாகச் சொன்னால், எந்தக் காலத்தினதோ, அந்தக் காலத்தினதாக, எந்த இடத்தினதோ அந்த இடத்தினதாக, அந்தக் காலத்துக்கும் அந்த இடத்துக்கும் 'சம்பந்தப்பட்ட' மனிதனுடையதாக அவனது ஆசாபாசங்களுடையதாக அவனது வெற்றி வீழ்ச்சிகளுடையதாக அவனது இலட்சியம் செயல் இவைகளுடையதாக இத்தனைக்கும் மேலே இவைகளைப் பிரதிபலிப்பனவாக மனிதனைப் படைப்பதே இலக்கியம்" என்கிறார். கழகப் பாடல்கள் எல்லாம் எந்தக்காலத்தில் எழுதப்பட்டனவோ அந்தக் காலத்தினவைதாம். எந்த இடத்தில் பாடப்பட்டனவோ அந்த இடத்தினவை தாம். அந்தக் காலத்துக்கும் அந்த இடத்துக்கும் தொடர்புடைய மக்களைப் பற்றினவைதாம். அவர்கள்தம் விருப்பு வெறுப்புகளையும் வெற்றி தோல்விகளையும் கொள்கை குறிக்கோள்களையும் வினை செயல்களையும் பற்றிக் கூறுவனதாம் என்பது அவற்றைப் படித்துப் பார்த்தால் அந்த எழுத்தாளருக்கே நன்கு தெரியும். எல்லாம் படிக்காத குறைதானே தவிரப் பாடல்களில் ஏதும் குறையில்லை.

அந்தக் கட்டுரையில் இன்னொன்றும் அவர் கூறியிருக்கிறார். "மேதை டால்சுடாயின் "போரும் அமைதியும்" போன்ற ஒன்று தமிழில் எழாத வரையில் தமிழனுக்கு இலக்கியமில்லை" என்கிறார். உருசிய எழுத்தாளர் டால்சுடாய் எழுதியுள்ள எந்தக் கதையிலும் கட்டுரை

யிலும் நல்லனவும் இனியனவும் இல்லாமல் இராது. அறவுரையும் அறிவுரையும் இடம் பெருமல் இராது. அவர்தம் "போரும் காதலும்" என்ற நூலிலும், "ஆசைகளுக்கு விலங்கு இட்டு விடுங்கள். இன்பத்தின் ஊற்று அகத்தேதான். புறத்தே இல்லை!" என்று சொல்லப் பட்டிருக்கிறது. "நம்முடைய சங்கத்தில் (பிரிமேசன் சங்கத்தில்) அறத்தையும் மறத்தையும் தவிர வேறுபாகுபாடுகள் எதையும் அறியோம். எவ்வுயிருந்தாலும் உடன் பிறந்தோனுக்கு உதவி செய்ய எப்போதும் தயாராக இரு. அல்வழி செய்வோர்க்கு அதைக் கூறித் தெருட்டு. அல்வழி சென்று வீழ்ந்தவர்களுக்குக் கை கொடுத்துத் தூக்கிவிடு. யாரிடத்திலும் சினமும் பகையும் கொள்ளாதே. எப் போதும் அன்பாக நடந்துகொள். எல்லார் மனத்திலும் மெய் நெறி விளக்கை ஏற்றிவை. அயலானுக்கும் உன் மகிழ்ச்சியில் பங்கு அளி. அவன் அடையும் மகிழ்ச்சியைக் கண்டு அழுக்காறு அடையாதே. இன்னா செய்தாரை மன்னித்துவிடு; ஏதேனும் ஒறுக்கும் எண்ணம் உண்டானுல் அவர்க்கு நன்மை செய்தே ஒறுப்பாய்" என்றெல்லாம் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்துகளை யெல்லாம் சொல்வதால் அந்த எழுத்தாளரின் எண்ணத்தின்படி டால்சுடாயின் நூலும் இலக்கியமாகாமல் தானே போகிறது? பின்னே அவர் அதை எப்படி இலக்கியம் என்பதற்குச் சான்ருக எடுத்துக் காட்டினுர்? அந்த எழுத்தாளரோடு நெருங்கிய பழக்கமுடைய நண்பர் ஒருவரைக் கண்டு பேச நேர்ந்த போது அவரிடம் இதுபற்றிக் கேட்டேன். "டால்சுடாயின் நூல் போன்ற ஒன்று தமிழில் எழாத வரையில் தமிழுக்கு இலக்கியமில்லை" என்று எழுதியிருக்கிருரே அப்படி அந்த நூலில் தமிழ் இலக்கியத்தில் இல்லாத எந்தக் கருத்து சொல்லப்பட்டிருக்கிறதாம்?!" என்று கேட்டேன். அதற்கு அந்த நண்பர் சொன்னுர். "நானும் இந்தக் கேள்வியை அவரிடம் கேட்டேன். அவர் அந்த நூலையும் படித்ததில்லையாம்! எல்லாரும் அந்த நூலைப் பாராட்டிச் சொல்கிருர்களே என்று அதனைச் சான்ருகக் காட்டி எழுதினுராம்!" என்ருர். இப்படிப்பட்ட எழுத்தாளர்களைத் தமிழகத்தில் தவிர வேறு எங்காவது காணமுடியுமா?

(தொடரும்)

---

**பொது நூலகங்களில் தென்மொழி வரவழைக்கக்**

**கையொப்பங்கள் வாங்கி**

**விடுத்துவிட்டீர்களா ?**

# பாரதிதாசன் பாத்திறம்

நிலவின் குளிர்ந்த ஒளித்திரட்சி எல்லார்க்கும் இன்பம் பயப்பது. அதன் வட்ட வடிவமான ஒளிக் குவியலை அவரவர் பார்த்துப் பருகிய தன்மைகளுக் கேற்பவும் அவரவர் அறிவிற்கேற்பவும் உவமை சாற்றிக் கூறி மகிழ்கின்றோம். தட்டுப் போலவும், வெண்ணெய்த் திரட்சி போலவும், பால் கிண்ணம் போலவும் காட்சி தரும் அவ்வொளி நிலா, பாவேந்தர் பாரதிதாசன் கண்களுக்கு எப்படிப் படுகின்றது? எத்தகைய இன்பம் தருகின்றது தெரியுமா? வானம் என்னும் நீல ஆடைக்குள் உடல் மறைத்துக்கொண்ட ஒருத்தி தன் முகத்தை நிலா என்று காட்டுகின்றாளாம். அவ்வாறு தன் உடல் முழுவதையும் காட்டாது முகத்தை மட்டும் காட்டுகின்றது ஏனெனில் அவள் தன் உடல் முழுவதையும் காட்டிவிட்டால், இந்த உலகம் காதல் என்னும் கொள்ளை நோயால் செத்துப்போகும் என்கிறார் பாவேந்தர். பாட்டைப் பாருங்கள்.

"நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை!
கோல முழுதும் காட்டிவிட்டால் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ?"

என்று இயற்கைப் பெண்ணை நோக்கிக் கேட்கின்றார். வானத்தை உடையாகவும் வான் நிலவை அவ்வுடையால் போர்த்திய பெண்ணின் ஒளிமுகமாகவும் உருவகித்துச் சொன்ன பாவேந்தர்க்கு அந்நிலவின் ஒளி, உள்ளம் உயிர் எல்லாவற்றிலும் இன்பத்தை நிரப்புகின்றது. உடனே உள்ளுணர்வு ஊறிக் கரை புரண்டு ஓடுகின்றது. அதற்கு இணை கூற உவமையைத் தேடுகின்றார். உவமை கிடைத்தது. ஆனால் அதை விளக்கச் சொற்கள்தாம் கிடைக்கவில்லை. பாவலர் தடுமாற்றத்தைப் பாருங்கள்.

"உனை நினைக்கும் போதினிலே என்னுள்ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுதுதற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத் திடுவதில்லை".

என்று அலமருகின்றார். உடனே சொற்களால் கூறமுடியாத அந்த உணர்வை ஓர் உவமையால் விளங்க வைக்கின்றார். நாள் முழுவதும்

உழைத்து ஒரு பயனும் கிடைக்காத ஒருத்தி வறுமையில் வாடும் தன் பிள்ளைகளுக்குப் பசியாற்ற முன்னுள் ஆக்கிய சோற்றுப்பானையைப் போய் பார்க்கின்றுள். அதில் சுடச்சுட வெண்மையான சோறு ஆவி வரக் கனத்திருந்தால் அவள் எத்தகைய இன்பம் கொள்ளுவாளோ அத்தகைய இன்பம் இவருக்கு நிலவைப் பார்த்தவுடன் வருகின்றதாம். பாவேந்தர் வாயாலேயே பாட்டைக் கேளுங்கள்.

"நித்திய தரித்திரராய் உழைத்துழைத்துத்
திணைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிது கூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின் நிலவே உனைக் காணும் இன்பந்தானே?"

எப்படி பாரதிதாசன் கண்ட நிலவின்பம்? இவ்வரிகளில் காட்டும் உவமை நிலவின் குளிர்ச்சி போல் நம் உடலிலும் உள்ளத்திலும், இணைந்து இன்பம் சேர்க்கின்றதா? இல்லையா ? பாரதிதாசனுக்குத் தனித்தமிழ் உணர்வில்லாத பொழுது முகிழ்த்த இப்பாடலில் உள்ள மூன்றேமூன்று வடசொற்களின் கறைகளைத் தவிர இப்பாடல் துல்லியமாக விளங்குகின்றதா இல்லையா ? இவ்வுவமையின் குளிர் உருவம் நம் உடலில் பாய்ந்த உடனேயே பாவேந்தர் கண்ட நிலவின் தோற்றம் நம் உள்ளத்தும் தெரிகின்றதா இல்லையா? பானையில் உள்ள வெண்சோற்றின் வட்ட வடிவம் நிலவின் வட்ட வடிவான ஒளிக் குவியலுக்கும், அச்சோற்றின் கனப்பால் எழும் மெல்லிய ஆவி, அந் நிலவைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் மென்மையான வெள்ளொளி வட்டத்திற்கும் பொருந்துகின்ற காட்சியின்பத்தை எப்படி விண்டு விளக்குவது? ஏழை மக்களின் வறண்ட கண்களுக்குப் பானையில் உள்ள திரண்ட சோற்றுக் காட்சி எவ்வாறு இன்பம் நல்குமோ அவ்வாறன்றே நமக்கு இப்பாட்டு இன்பம் நல்குகின்றது. நம்மால் சொல்ல முடியாத ஒன்றை நம் தொண்டைக் குழியில் அடைத்துக் கொண்டு வெளிவராமல் நின்ற உண்மையை இப்பாவலர் எளிதே வெளியிட்டுவிட்டார் பார்த்தீர்களா? நாம் இன்றைக்கெல்லாம் தேடிக் கொண்டிருந்தாலும் நம் உள்ளத்திற்குத் தட்டுப்படாத இந்த உவமைக் காட்சி பாவேந்தரின் உணர்வுக் கண்களுக்கு மட்டும் எவ்வாறு தட்டுப் பட்டது.

"காலையிளம் பரிதியிலே அவனைக் கண்டேன்;
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்; அந்தச்

"சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்"

என்றும் 'அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்' என்றும் தம் கண்களுக்கு அவை தட்டுப்படுகின்ற வகையினையும் பாவேந்தர் பிறவிடங்களில் கூறியிருப்பதற்கு அடிப்படையாக அவருக்கிருக்கும் உணர்வாற்றலன்றோ அவருக்கிந்த உவமையைத் தேடிப் பிடித்துக்கொடுத்துள்ளது.

அவர் நூல்களிலெல்லாம் செறிந்து கிடக்கும் உவமை மணிகளை ஒன்றுவிடாது கூட்டிச் சேர்த்து ஒரு மாலையாக உங்கட்குத் தொடுத்துக் காட்டுவது அரிது. அவர் பாத்தொடையல்களிலெல்லாம் உவமை முத்துகள் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன. உவமைப் பவழங்கள் அவர் மிடைந்த ஒவ்வோர் அடியிலும் ஒவ்வொரு பாட்டிலும் தொட்ட இடம் எல்லாம் கண்ணில் தட்டுப்படுகின்றன.

"கீரியின் உடல் வண்ணம் போல்
மணல் மெத்தை" — என்று வியப்பார்!
"முதலைகள் கிடப்பதைப்போல்
சின்னதும் பெரிதுமான வெடிப்புகள்! – என்று, மயங்குவார்!
"உரித்தநற் றுழம் பூவின்
நறும்பொடி உதிர்ந்ததைப் போல்
பெருமணல்" – என்று பூரிப்பார்!
"பெருஞ்சிங்கம் அறைய வீழும்
யானைபோல், பெருகிப் பாய்ந்து
வரும் வெள்ளம் மோதலாலே
மணற்கரை இடிந்து வீழும்" – என்று பாடிக் களிப்பார்!

எங்கெங்கு, எதையெதைப் பார்த்தாலும் அங்கங்கு அதற்கதற்குப் பொருத்தமான ஓர் உவமை வந்து அவர்க்கருகில் நின்று அவர்க்கு இன்பம் சேர்க்கும்! அவர் சொற்களால் நமக்கும் இன்பம் நல்கும். நீரால் கனத்துத் தாழும் முகில்களைப் போலவும், மகவை அடிவயிற்றில் சுமந்து திரியும் தாயைப்போலவும் அவர் பாட்டுணர்வைச் சுமந்து திரிந்து தமிழ் என்ற சுமைதாங்கியில் இறக்கி வைத்து ஆறுதலும் மனமகிழ்ச்சியு முற்றார். அவர் இறக்கி வைத்த சுமைகளுக்குப் பக்கத் தாங்குகளாக இத்தகைய உவமைகளை அவர் நூல் முழுதும் வாரி இறைத்திருக்கின்றார். மழை பெய்து ஈரங் கசிந்து கொண்டுள்ள மருத நிலங்களில் இங்குமங்கும் செம்பவழங்களைப் போல் உருண்டு செல்

லும் தம்பலப் பூச்சிகளைப் போல் அவர் பாடல் நிலத்தில் உவமை யணிகள் உருண்டு ஒளியோடிக் கிடக்கின்றன. ஒரு காட்சியைப் பாருங்கள்!

பரந்து விழ்ந்த பெருங்கடற் பரப்பில் உச்சிக் கதிரவனின் வெள்ளிக் கதிர்கள் பட்டுத் தெறித்தும், நெளிந்து நீண்டும் நீந்திக் களிக்கின்றன. அக்கதிர்க்கைகளின் நெளிவு நாம் கட்டியுள்ள வெள்ளிய ஆடை காற்றடிக்கையில் அக்காற்றின் மேனியுடன் உராய்ந்து நெளிவது போல் பட்டதாம் பாவேந்தரின் கண்களுக்கு! பாட்டைப் பாருங்கள்.

பின்னிய ஆடை காற்றில்
பெயர்ந்தாடி அசைவதைப் போல்
நன்னீரில் கதிர் கலந்து
நளிர்கடல் நெளிதல் கண்டேன்!" – என்கின்றார்.

இவை போல் அவர் அள்ளிக் கொட்டிய உவமைகள் ஏராளம்! சிறு பிள்ளைகளின் பிஞ்சுப் பாதங்களில் தோய்ந்துள்ள சிறிய செருப்பு புன்னை மரத்தின் கொழுவிய ஒளி வாய்ந்த இலைகள் போல் அவர் கண்களில் படும்! அதேபோல் காதற் புறுவின் துடிப்பான மெல்லிய கால்களின் சிறிய அடிகள் புன்னை மலரின் காம்பு போல் அவர்க்குக் காட்சி தரும்! முற்றி முதிராத இளைஞர்களின் முகவாயின் மேற்புறத்து அரும்புகின்ற மீசையை அவர் பார்ப்பார்; உடனே "கிளிக் கழுத்தின் பொன்வரி போல் அரும்பும் மீசை' என்பார். கறுமை சாராத அம் மீசை மயிர்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் பொன் மயிர் போல் இருப்பதை மறந்து போகாமல் அவர் காட்டிய இந்த உவமை படிப்பார்க்கும் உணர்வார்க்கும் எவ்வளவு இன்பம் சேர்க்கின்றது பார்த்தீர்களா?

புதுக்குழந்தையின் வெளிரோடிய செம்மஞ்சள் வண்ணத் தளிர் முகம் அவருக்கு வெண்தாமரை போல் இருக்கின்றதாம். அம்முகத்தில் இருந்துகொண்டு இப்புறமும் அப்புறமும் அசைந்துகொண்டிருக்கின்ற இரண்டு புதிய நீலவிழிகளும் அவ்வெண்தாமரையில் விளையாடும் வண்டு போல் இருக்கின்றனவாம். உடனே பாவேந்தர் அப் பச்சைக் குழந்தையைப் பார்த்து,

"வெண்தா மரையில் விளையாடும் வண்டு போல்
கண் தான் பெயரநீ என்ன கருதுகின்றாய்?

என்று கேட்கின்றார்? இவ்விரண்டு வரிகளில் உள்ள இலக்கிய நயத்தையும் உவமைச் சிறப்பையும் எடுத்து விரிப்பதானால் எத்தனைவரிகள் எழுத வேண்டும் தெரியுமா?

(தொடரும்)

# பாட்டரங்கம்

ஆர்விடுத்தா லென்ன ? இங் கார்போற்றி ஞலென்ன ?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு !

விடுதலை.

— இளந்துறவி

நல்லிரும்பு நெஞ்சுகளே
நந்தாய் அழைக்கின்ருள்
வல்லவரே வாருங்கள்
வாழ வழிசெய்வோம்!

எண்ணப் பொழுதில்லை
எழுவீர் குருதியினைத்
தண்ணீராய்க் கொட்டித்
தளையை அறுத்திடுவோம்!

கண்கள் விழித்திருந்தும்
கருத்தை அடகுவைக்க
எண்ணுதீர் நாட்டில்
இருளைப் பரப்பாதீர் !

ஆண்டாண்டுக் காலங்கள்
அடிமை யெனவாழ
வேண்டாதீர்! வேண்டா;
வீறுகொண்டு நில்லுங்கள் !

உண்ண நினையாதீர்
உறக்கத்தை நாடாதீர்
எண்ணத் துரிமைத்தீ
எழுந்து பரவட்டும் !

தாயை அடகுவைத்துத்
தத்தம் குடல்வளர்த்து
நாயை விடக்கீழாய்
நாட்டில் பிழைக்காதீர் !

ஒடுங்கள் நில்லாதீர்,
உறங்குந் தமிழர்களைச்
சாடி விடுதலைக்குத்
தாவிவரச் செய்யுங்கள் !

சாதல் மேல் !

– இரா. பாண்டியன்; பினாங்கு.

பொய்யகன்ற இன்றமிழின் சிறப்பைக் கண்டு
பொச்சாப்புக் கொண்டிட்ட வடவர் கூட்டம்
வெய்யவனை திரைபோட்டு மறைக்க எண்ணி
வீண்பாடு படுவதனை அறிந்த பின்னும்
பொய்யுரைப்பார் தருமெச்சில் சோற்றில் சற்றே
பொலிகின்ற சுவைக்காகப் புவியோர் போற்றும்
துய்யதமிழ் மொழியதனை ஒழிக்க எண்ணித்
தூய்தமிழைப் பகைப்பதினும் சாதல் மேலே !

தாய்வாழப் பொறுக்காத தனயன் போலத்
தமிழ்வாழப் பொறுக்காதான் தமிழ னானால்
நாய்பார்த்து நகைக்காதோ நம்மை? தீய
நரியாட்சி செய்யாதோ தமிழர் நாட்டில்
காய்வாரின் காலடியில் புகழை வைத்துக்
கைகட்டி வாய்பொத்தி நின்று தூய
தாய்மொழியைச் சாய்க்கவழி சொல்லி நாளும்
தண்டமிழைப் பகைப்பதினும் சாதல் மேலே !

பாலீந்த ஆமடியைப் பறிக்க எண்ணும்
பாழான தீயெண்ணம் கொண்டு மெய்ம்மை
நூலீந்த செந்தமிழில் உறையும் தொன்மை
நுட்பநிலை கண்டுலகோர் போற்றும் வேளைச்
சேலீந்த விழிக்கழகு செய்து செல்வம்
சேர்க்கின்ற பொதுமகளிர் நெஞ்சம் போலச்
சாலீந்த வயிற்றுக்கே தமிழைத் தூற்றித்
தாய் தமிழைப் பகைப்பதினும் சாதல் மேலே !

பாலூட்டும் வேளையிலே கலந்து தந்த
　　பைந்தமிழை மறப்பதுவும் சரியோ? அன்னை
தாலாட்டும் வேளையிலே நெறிகள் சொன்ன
　　தாய் தமிழைப் பழிப்பதுவும் முறையோ? மெல்ல
வாலாட்டும் வடவரிடம் தமிழர் முன்னாள்
　　மாண்பதனைக் கூறுமுயர் துணி விழந்து
கோலாட்ட ஆடுகின்ற குரங்காய், இன்பம்
　　கொணர்தமிழைப் பகைப்பதினும் சாதல் மேலே!

அரசியல் அறியீர்! 　　வளவனூர். அரங்க. இராசாராமன்.

வரவறியீர்; நாச்சுவைக்கு வறிதேனும்
　　பொருளிழப்பீர்; விலைமி குந்த
அரவுரித்தாற் போலும்ஆ வியந்துகிலை
　　வாங்குகின்றீர்; ஆறும் நாளில்
அரசியலை அறிந்தவர்போல் பொருள்விலையை
　　அடக்காத அரசென் கின்றீர்!
தரமுடைய அரசியலை அறியீர்நீர்
　　அறிந்ததெலாம் கட்சி தானே!

தமிழரின் கடமை! 　　துரை தியாகராசன், கோவை-14.

தமிழர்க்கு மொழியைக் காக்கும்,
　　தன்னிகர் உறுதி வேண்டும்!
தமிழர்க்கு தாயைப் பேணும்
　　தனிப் பெருந் திறமை வேண்டும்!
தமிழர்கள் உயிரை ஈந்து
　　தாய்மொழி காத்து நிற்பின்
தமிழர்தாம் பாரில் மேலாந்
　　தனிப்புகழ் பெறுவர், அன்றோ?

புதுமனைவி!
　　— இரா. சோதிவாணன், சென்னை-20.

ஒளிபடைத்த உனதழகு விழியால் நேராய்
　　எனைநோக்க உனைநாணங் கொன்றோ போடும்?
களிபடைத்து நான்சிந்துங் காதல் பேச்சைக்
　　கேட்கமட்டும் செவி பெற...

துளிகிடைக்கும் உன்மொழித்தேன் எனவி ழைந்தால்
ஒளிமுத்துச் சிந்துமென்றோ வாய்ப்பூட் டேற்றாய்?
தளிர்படைத்த நறுமேனி தன்னைத் தொட்டால்
தன்னுடற்பூ வாடுமென்றோ நடுங்கி விட்டாய் ?

என்முன்னால் தலைகுனிந்தே இருப்ப தேனோ ?
எழுந்து சென்றால் என் முதுகைப் பார்ப்பதேனோ ?
உன்முன்னால் நானிருந்தால் ஊமை தானோ ?
உனைப் பிரிந்தால் கணைபட்ட கிள்ளை தானோ ?
பொன்மானே! உணவிடுங்கால் பூரிப் பேனோ ?
என்னுடம்பில் சிறுபுண்ணே படினும் ஏனோ
உன்நாணைத் துறந்தலறித் தொடுவாய் என்னே ?
உன்படைப்பின் பொருளுமென்ன புகல்வாய் தேனே!

## முகிழ்த்த காதல் !

– காவிரிக் கயலன், இளங்காடு.

ஆர்வ நெஞ்சமொடு யானோக் கினனே;
தேரும் உளத்தொடு தானோக் கினளே;
புன்னகைத் தூதும் என்கண் ணோக்கமும்
சின்மொழிச் செலவும் யான்விடுத் தனனே;
கண்களின் துடிப்பும் கரந்த வாயிடை
மென்னகை தானும் மெல்லியல் விடுத்தனள்;
கார்நிகர்க் கூந்தல் நேர்மனந் தன்னை
அறிந்தே னாக அணிமை சென்றே
நறும்பூ வமர்ந்து பெருந்தேன் உண்டனன்;
உலகீர் நும்மைப் பலகால் வாழ்த்தி
வேண்டுவல் ஒருசொல்; விளம்பிடக் கேண்மோ!
சிரித்த நிலவிற் செவ்வொளி யன்னவெம்
முகிழ்த்த காதல் முரியா தீமே!

---

## உறுப்பினர்கள் கவனிக்க.

பணம் விடுக்கும் பொழுது உறுப்பினர்கள் தங்களின் உறுப்பினர் எண்களைத் தவறாது குறிப்பிட வேண்டுகின்றோம். முகவரி மாற்றஞ் செய்ய விரும்புவோர் தம் புதிய முகவரியோடு, பழைய முகவரியையும் குறிப்பிட வேண்டுகின்றோம். – அமைச்சர்

# மறைந்து வரும் தமிழ்ச் சொற்கள்

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனால்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்றாகப் பேணிவர நாம் முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு!

---

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்:

ந. முத்தமிழன், முதனிலைத் தமிழாசிரியர், முதுனை,
(முதுகுன்றம் வட்டம்).

தலைகடை – வாயிற்படி.
பட்டகசாலை – நடுமுற்றத்தை அடுத்த தாழ்வாரப் பகுதி.
இடதுகை உணவு – கூழ் உணவு.
உழாக் கலப்பை – வேலையில் உதவாக்கரையன்.
ஒட்டாரம் – அடம் பிடித்தல்.
வாழாவெட்டி – கணவன் இருக்க பெற்றோர் வீட்டில் வாழ்பவள்.
கலவோடு – சட்டி பானையின் மேல் கழுத்து உரலுக்கு மேல் வைக்கும் கல் வளையம்.
சிறுதாலி – திருட்டுத்தனமாக தாலி கட்டுவது.
நடுவீட்டுத்தாலி – கைம்பெண் மறுமணம்.
ஒசமாட்டி – நிசமாக.
எக்கரணம் – கட்டற்ற மகிழ்ச்சி.
முறுங்குழி } இறந்தாருக்குச் செய்யும்
முறுங்குருவை } பால் தெளி சடங்கு.
குழிவாசல் – கல்லறை.
சேடர் – நெசவாளர்.
கன்னி – அச்சில் பிணைக்கும் நூல் தொகுப்பின் பகுதி.

விந்துபாவு— தறியின் அச்சில் நூல் பிணைக்கக் கோக்கப்பட்டிருக்கும் நூல்.
எகத்தாளம் — மமதைச் சிரிப்பு.
போட்டு — சுவரில் தரையை ஒட்டியுள்ள மாடம்.
கல்லுச்சட்டி — மாவுக்கல்லில் குடைந்த கலம்.
அருக்கன்சட்டி — வாயகன்ற ஏனம்.
தாமினி — மாடுகட்ட உதவும் கயிறு.
மணியான் கயிறு — இருபுரி சிறுகயிறு.
பிணைகட்டி — பலமாடுகளை பிணைக்கும் கயிறு.
கார் — கலப்பைக் கொழு.
பாலி — பலவித முளைப்பயிர்.
கொண்டா அடித்தல் — கும்பி அடித்தல்.
தும்பி பறத்தல் — இருபெண்கள் எதிர் எதிராக கைகோர்த்துச் சுற்றி ஆடுதல்.
உனக்குயரம் — உனக்காக.
தட்டுக்கூடை — சாணம் அள்ளும் கூடை.
நொறுங்கு — அரிசி நொய்.
முறைப்பாடு — தெய்வத்தின் மீது ஆணை இட்டுப் பேசாமலிருத்தல்.
அலகு — புல்லினுல் பின்னி சோறு வடிக்க உதவும் தட்டு. கூழ் கிளறும் துடுப்பு.
சாரணி — வடைவாரி, இல்லிக் கரண்டி.
ஒழுங்கை — நிலத்திற்குச் செல்லும் வழி.

குச்சுக் கொளுத்தி
கேழ்ப்பமாறி
முடிச்சுமாறி
தில்லுமுல்லு
கோள்முட்டி
நந்துருணி
} பொய் வதந்தி பரப்பிக் குடி கெடுப்பவன்.

கெடி — ஆணை.
நொறுவை — தின்பண்டம்.
விசுக்கிட்டான் — சிறியவன்.
குத்து மதிப்பு — தோராயமாக மதிப்பிடுதல்.
மாறிக்காய் - பருவமல்லாக் காலத்தில் காய்ப்பது.
பிசுக்கு — இனும், இலவசம்.

(தொடரும்)

## வெளிவந்துவிட்டது !

மொழிப்பெரும் புலவர்

**கலைத்தலைவர். ஞா. தேவநேயப் பாவாணர்**

எழுதிய அரிய ஆராய்ச்சி மொழிநூல்

THE PRIMARY CLASSICAL LANGUAGE
OF THE WORLD

**ஆங்கிலம்**

உலக மொழிகளினின்று வேறுபட்ட தமிழ் மொழியின் தொன்மை, முன்மை, தாய்மை, தூய்மை, தனிமை, இனிமை, வளமை, இளமை ஆகிய எட்டுத் தனிப் பண்புகளையும் உலகெலாம் உணர்ந்து கொள்ளுமாறு, பாவாணர் தம் அஃகியகன்ற ஆராய்ந்த புலமை முற்றும் விளங்க ஆங்கிலத்தில் எழுதிய ஈடும் எடுப்பும் அற்ற முழுமையான மொழி நூல்.

**விலை உருபா 15**

கிடைக்குமிடம்

**பாரி நிலையம்**

59, பெருவழி (BROADWAY)

சென்னை-1.